வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 26.07.2021 திங்கட்கிழமை | இதழ் : 235 | பக்கங்கள் : 16






# ஆபத்தான திசை நோக்கி நகர்கின்றது இலங்கை!

## மங்கள சமரவீர எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 26

சிம்பாப்வே அல்லது வெனிசுவேலா நாடுகளுக்கு நேர்ந்த நிலைமை இலங்கைக்கு ஏற்படக்கூடிய அபாயம் உருவாகியுள்ளது என முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். 15

## ஆசிரியர் சம்பள பிரச்னைக்கு பொருத்தமான தீர்வு கிடைக்கும்

### கல்வி அமைச்சின் செயலாளர் உறுதி

கொழும்பு, ஜூலை 26

அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினைகளுக்குப் பொருத்தமான தீர்வு எதிர்வரும் நாட்களில் கிடைக்கும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில சி. பெரேரா தெரிவித்தார்.

ஹொரனை பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக் 15

## “சிறுவர் மீதான வன்முறையை எதிர்ப்பது சமூகப் பொறுப்பு”

கொழும்பு, ஜூலை 26

சிறுவர் துஸ்பிரயோகம் சிறுவர் அடிமைத்தனம் என எப்படி அழைத்தாலும் அனைத்தும் சிறுவர்களிற்கு எதிரான வன்முறைகளே அவற்றை எதிர்ப்பது பொறுப்புணர்வுள்ள சமூகத்தின் பொறுப்பு என இராஜாங்க அமைச்சர் சுதர்சினிபெர்ணான்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

சிறுவர் துஸ்பிரயோகத்தினை வெறுமனே எதிர்ப்பதற்கு அப்பால் சட்டத்தினை நடைமுறைப் படுத்துவதற்கு ஒழுங் 15

## கடும் காற்றுடன் கூடிய காலநிலை; கடற்றொழிலாளருக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 26

காலி தொடக்கம் மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டையினூடாக பொத்துவில் வரையிலான கடற்பிராந்தியங்கள் மற்றும் புத்தளத்தில் இருந்து மன்னாரினூடாக காங்கேசன்துறை வரையிலான கடற்பிராந்தியங்களில் காற்று மணித்தியாலத்திற்கு 60 கிலோமீட்டர் வரை அதிகரித்து வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. 15

## அரிசி, தேங்காய் போன்று எரிபொருள் விலைகளையும் குறைக்க முடியாது!

### நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ



கொழும்பு, ஜூலை 26

அரிசிதேங்காய் போன்று எரிபொருள் விலைகளை குறைக்க முடியாது என நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு நடவடிக்கைகள் மூலம் அரிசிதேங்காய் போன்றவற்றின் விலைகளை 15

## இராஜமகேந்திரன் மறைவுக்கு இந்தியத் தூதரகம் அனுதாபம்



கொழும்பு, ஜூலை 26


சக்தி - சிரச - எம்.ரி.வி. ஊடக குழுமங்களின் உரிமையாளரும் கபிட்டல் மகாராஜா நிறுவனத்தின் கூட்டுப்பணிப்பாளருமான ஆர். இராஜமகேந்திரனின் மறைவுக்கு இலங்கைக்கான இந்தியத் தூத 15

## தகவல் அறியும் உரிமைக்காக முன்னின்றவர் ராஜமகேந்திரன்

### பிரதமர் மஹிந்த இரங்கல் செய்தி

கொழும்பு, ஜூலை 26

மக்களின் தகவல் அறியும் உரிமைக்காக தொடர்ந்தும் முன்நின்ற ஆர்.ராஜமகேந்திரன் நமது நாட்டின் தொலைக்காட்சி மற்றும் வானொலி துறையை நவீனமயப் படுத்துவதில் முன்னோடி 15



## உள்ளூராட்சி சபை தேர்தல் ஒரு வருடம் பிற்போடலாம்!

கொழும்பு, ஜூலை 26

இலங்கையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒரு வருட காலத்துக்கு ஒத்திவைக்க விடயத்துடன் தொடர்புடைய அமைச்சருக்கு அதிகாரம் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி தேர்தலை நடத்தாமல், 2023 ஆம் ஆண்டு 15

## நேற்று 1, 656 பேருக்கு கொரோனா தொற்று

கொழும்பு, ஜூலை 26

நாட்டில் மேலும் 1,656 கொரோனாத் தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதையடுத்து, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட 15

## கொரோனா தொற்றால் மேலும் 45 பேர் மரணம்!

கொழும்பு, ஜூலை 26

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 45 பேர் மரணித்துள்ளனர் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு விடுத்துள்ள அறிக்கை 15

## கொரோனா தடுப்பூசி எங்களுக்கும் வழங்குக

### தமிழ் அரசியல் கைதிகள் வேண்டுகோள்

கொழும்பு, ஜூலை 26

தங்களுக்கும் விரைவில் கொரோனா வைரஸ் தடுப்பூசி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் நிலைமையில் சிறைச்சாலைக்குள் முறையான சுகாதார வழிமுறைகள் இல்லை எனவும், தம்மில் பலர் வயதானவர்கள் என்பதுடன் சுகவீனமுற்று இருக்கின்றனர் எனவும் புதிய மகசின் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் குறிப் 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது...!

நூறு கறுப்பு எறும்புகளையும் நூறு சிவப்பு எறும்புகளையும் சேகரித்து ஒரு கண்ணாடி ஜாடியில் வைத்து அமைதியாக விட்டால் எதுவும் நடக்காது. ஒரு பிரச்னையும் வராது. அவை தனித்தனியாக தங்கள்பாட்டில் ஓடித்திரியும்.

ஆனால், நீங்கள் அந்த ஜாடியை எடுத்து பலமாக குலுக்கி, ஒரு மேசையில் வைக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அடுத்து என்ன நடக்கும்?

நீங்கள் குலுக்கிய வேகத்தில், ஒன்றும் புரியாத அந்த எறும்புகள் ஒன்றையொன்று தாக்கி, ஒன்று மற்றொன்றைக் கொல்லத் தொடங்கும். சிவப்பு கறுப்பை எதிரி என்றும் கறுப்பு சிவப்பை எதிரி என்றும் நம்பும்.

ஆனால்,0உண்மையில், எதிரி அந்த ஜாடியை குலுக்கியவர் என்பது எறும்புகளுக்குத் தெரியாது. தெரியவும் வாய்ப்பில்லை. அப்படி செய்தவர் ஒரு நாற்காலியில் உட்கார்ந்துக் கொண்டு அந்த ஜாடியை ஆனந்தமாகப் பார்த்துக் கொண்டிருப்பார்.

இந்த சிக்கலான சமுதாயத்திலும் இதே நிலைதான்.

ஆண்கள் - பெண்கள், இடதுசாரி - வலதுசாரி, பணக்காரன் - ஏழை, நம்பிக்கை - அறிவியல், நாத்திகம் - ஆத்திகம், படித்தவர் - படிக்காதவர், எங்கு பார்த்தாலும் வதந்திகள் - வதந்திகள் மட்டும்தான்.பற்ற வைக்க ஆளாளுக்கு அலைந்துக் கொண்டிருக்கிறார்கள்.

எந்த விஷயத்திலும் பொது புத்தியோடு அணுக வேண்டாம். பகுத்து, அலசி ஆராய்ந்து பிரச்னைகளுக்குத் தீர்வு காண்போம். நாம் ஒருவருக்கொருவர் சண்டையிடுவதற்கு முன், நம்மை நாமே ஒரு கேள்வியை கேட்டுக் கொள்ள வேண்டும்.

அந்த ஜாடியை குலுக்கியது யார்?.

முகநூலில் தான் படித்த இந்தக் குறிப்பை நண்பர் ஒருவர் ஊர்க்குருவிக்கு அனுப்பியிருந்தார். பொருத்தமான வேளையில் இதனை நீங்கள் பயன்படுத்தலாம் என்ற குறிப்புடன்.

அண்மையில், முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் இல்லத்தில் பணியாற்றிய சிறுமியின் மரணத்தைத் தொடர்ந்து நாட்டில் அந்தச் சிறுமியின் மரணத்திற்கு நீதிவேண்டி நடக்கும் போராட்டங்களைப் பார்த்தபோது இந்த குறிப்பு ஞாபகத்திற்கு வந்தது.

சிறுமி தீக்காயங்களுடன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட நிலையில் மரணமடைந்திருக்கிறார். அவர் தொடர்ச்சியாக பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகியிருந்தாரென பிரேத பரிசோதனையை நடத்திய மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இந்தச்சிறுமி பாலியல் கொடுமைக்கு ஆளாகியிருந்தால் அதனை அங்கு பணியாற்றுகின்ற மற்றுமொருவர் காரணமானவராக இருந்திருந்தால், அதனை அந்தச் சிறுமி தனது எஜமானர்களிடம் சொல்லியிருக்கலாம். ஆனால், அவர் அந்த வீட்டில் அதிகாரம் மிக்க ஒருவராக இருந்தால் மாத்திரமே அவர் தனது கொடுமைகளை தனக்குள் வைத்துக்கொண்டு இந்தக் கொடுமையை எதிர்கொண்டிருப்பார். அது குறித்து நீதியான விசாரணை நடத்தப்படும் என்று நம்புவோம்.

ஆனால், இந்தச் சிறுமிக்கு நடந்த கொடுமை குறித்து ஊர்க்குருவிக்கு இருக்கும் வருத்தம், இதுபோன்று இன்னமும் எத்தனை சிறுமிகள் நாட்டில் பல்வேறு வீடுகளில் இருப்பார்களோ என்பதுதான்.

தங்கள் தங்கள் வீடுகளில் தமக்கு அடிமைகளாக வேலை செய்ய ஆட்கள் தேவை என்கின்ற நிலைமை ஏற்பட்டதும், நம்மவர்களுக்கு நினைவுக்கு வருவது மலையகம்தான். மலையகம் இன்று மிக வேகமாக மாற்றமடைந்து வருகின்ற போதிலும், இந்த நிலைமை மட்டும் தொடரவே செய்கின்றது.

லயன்களில் வாழ்க்கை, தேயிலைத் தோட்டங்களில் அட்டைக் கடி - குளவிக்கொட்டுக்கு இடையே வேலை, அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலை என்பன இன்றும் தொடர்ந்துகொண்டேதான் இருக்கின்றன. மலையகத்தில் இளைஞர்கள் படித்து இன்று பல்வேறு துறைகளிலும் மிக உச்சத்தில் இருந்தாலும், பெரும்பான்மை மலையக மக்களின் வாழ்க்கையில் பாரிய மாற்றங்கள் ஏற்படவில்லை என்ற உண்மையையும் நாம் ஏற்றுக்கொண்டாகவேண்டும்.

இந்த நிலைமைக்கு காரணமானவர்கள் இவர்கள்தான் என்று யார் மீதும் சுட்டுவிரல்களை நீட்டுவது சரியானதாக இருக்காது.

இந்தச் சிறுமிக்கு நிகழ்ந்த கொடுமைக்கு நீதி கிடைக்கவேண்டும் என்பதில் யாரும் மாற்றுக்கருத்தைக் கொண்டிருக்க மாட்டார்கள்.

ஆனால், வெறுமனே இந்தக் கொடுமைக்காக மாத்திரம் குரல்கொடுக்காமல், இப்படியொரு சம்பவம் இனிமேலும் ஏற்படாமல் பார்க்கவேண்டும். குறிப்பாக மலையகத் தலைவர்களாவது இந்த விடயத்தில் கவனம் செலுத்தவேண்டும்.

அந்த ஜாடியை குலுக்கியது யார் என்பதைக் கண்டறிந்து கொள்வதுபோல....

சிறுவர்களை வேலைக்கு அனுப்பவேண்டிய நிலையில் ஏன் பெற்றோர் இருக்கின்றனர்? இவ்வாறு சிறுவர்கள் மலையகத்திற்கு வெளியே அனுப்பப்படுவதற்கு உதவுபவர்கள் யார்? இந்த அவலம் தொடராமல் தடுக்க போராடுவோம்.!

**- ஊர்க்குருவி**

# இலங்கைக்கு எரிபொருள் வழங்குவதற்கு விநியோகஸ்தர்கள் மறுப்பு - சம்பிக்க

கொழும்பு, ஜூலை 26

இலங்கையின் எரிபொருள் விநியோகத்திற்கான வேண்டுகோள்களை ஏற்கமாட்டோம் என விநியோகஸ்தர்கள் தெரிவித்துள்ளனர் என குறிப்பிட்டுள்ள முன்னாள் அமைச்சர் சம்பிக்கரணவக்க விரைவில் லெபனான் நிலையேற்படலாம் என குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கை லெபானின் நிலைக்கு தள்ளப்படலாம் என அவர் தெரிவித்துள்ளார். அரசாங்கம் பொருளாதார அபிவிருத்தி குறித்து போலி நாடக மாடுகின்ற போதிலும் பல மாதங்களாக பணம் செலுத் தாததால் எரிபொருள் விநி யோகஸ்தர்கள் இலங்கையின் எரி பொருளிற்கான வேண்டு கோள் களை ஏற்க மறுத்துள்ளனர் என அவர் தெதரிவித்துள்ளார்.சாங்கத்தின் பொருளாதார கொள்கைகளால் லாப்ஸ் போன்ற சில வலுவான நிறுவனங்கள் வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார். லாப்ஸ் நிறுவனத்தின் வீழ்ச்சியின பின்னர் இலங்கையின் காஸ் சந்தைப்படுத்தும் தொழில்துறை மோசடிக்கும் பல்களின் கரங்களிற்கு சென்றுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நினைவேந்தலுக்கு நீதிமன்றம் தடை!

மட்டக்களப்பு, ஜூலை 26

மட்டக்களப்பு தமிழீழ விடுதலை இயக்கமான ரெலோ இயக்க காரியாலயத்தில் யூலை படுகொலை நினைவேந்தலை செய்வதற்கு எதிராக இயக்கத்தின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினர் கோ. கருணாகரன் , முன்னாள் கிழக்கு மாகாண சபை பிரதி தவிசாளர் இந்திரகுமார் பிரசன்னா ஆகியோருக்கு நீதிமன்றம் தடை உத்தரவு வழங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 1983 ஜூலையில் வெலிக்கடை சிறைச்சாலையில் குட்டுமணி தங்கத்துரை உட்பட 38 பேர் படுகொலை செய்யப்பட்டனர் இவர்களின் 38 ஆவது நினைவேந்தல் நிகழ்வு மட்டக்களப்பு கோவிந்தன் வீதியிலுள்ள ரெலோ அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை 25ஆம் திகதி தொடக்கம் 27 ம் திகதிவரை இடம்பெற இருந்தது.

இந்த நினைவேந்தலில் அரசியல்வாதிகள் தொடக்கம் ஆதரவாளர்கள் அதிகமானோர் கலந்து கொள்ளவுள்ளதால் நாட்டில் தற்போது கொரோனா தொற்றை கட்டுப்படுத்த வேண்டியதன் முகமாக சுகாதார நடைமுறையை கடைபிடிக்க வேண்டியதன் காரணமாக இந்த நினைவேந்தல் நடைபெறாமல் நிறுத்துவதற்கான நீதிமன்ற தடை உத்தரவு ஒன்றை மட்டக்களப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நீதிமன்றில் கோரியதற்கமைய நீதிமன்றம் இருவருக்கும் நினைவேந்தல் செய்வதற்கு தடை விதித்து உத்தரவு பிறப்பித்து கட்டளை வழங்கியுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்

## கல்வி tv CHANNEL-1

**26.07.2021**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2

**26.07.2021**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
26.07.2021 திங்கட்கிழமை
பிலவ வருடம், ஆடி 10

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# தமிழ் கட்சிகள் செய்ய வேண்டியது?

வடக்கு மாகாண பிரதம செயலாளராக, சிங்களவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கின்றார். வவுனியா மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றிக் கொண்டிருந்த ஒருவரே இவ்வாறு நியமிக்கப்பட்டிருக்கின்றார். இது ஜனாதிபதியின் சிங்கள - பௌத்த சிந்தனையின் வெளிப்பாடு என, வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்திருக்கின்றார். இந்த ஆண்டு சுதந்திர தின உரையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தன்னை ஒரு சிங்கள - பௌத்த தலைவராக பிரகடனம் செய்திருந்தார். தன்னை ஒரு சிங்கள - பௌத்தர் எனப் பிரகடனம் செய்திருக்கும் ஒருவரிடமிருந்து, பௌத்த சிந்தனை வெளிப்படுவதில் என்ன ஆச்சரியம் உண்டு? கடந்த ஜனாதிபதி தேர்தலில் அவர் தனிச் சிங்கள வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டிருந்தார். தன்னால் அவ்வாறான ஒரு வெற்றியை பெற முடியும் என்பதையும் அவர் ஏற்கனவே பகிரங்கமாக அறிவித்திருந்தார். சிங்கள மக்களும் அவரை தங்களின் தலைவராக அங்கீகரித்தனர். தனது ஜனாதிபதி பதவியேற்பையும் புகழ்பெற்ற பௌத்த ஸ்தலமான அநுராதபுரத்தில் மேற்கொண்டிருந்தார். இவைகள் எதனை உணர்த்துகின்றன?

இந்த விடயத்தை எதிர்க்கும்போது ஒரு விடயத்தை கவனிக்க வேண்டும். அதாவது, வடக்கு மாகாணத்தின் ஆளுநராக ஒரு தமிழர் நியமிக்கப்பட்டிருக்கும் நிலையில், தற்போது பிரதம செயலாளராக சிங்களவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கின்றார். முன்னர், வடக்கு மாகாணத்திற்கான ஆளுநர்களாக சிங்களவர்களே நியமிக்கப்பட்டிருந்தனர். ஆனால், கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்ததைத் தொடர்ந்து, வடக்கு மாகாணத்திற்கு தமிழர் ஒருவரை ஆளுநராக நிமியக்க வேண்டும் என்பதில் கூடுதல் கரிசனை எடுத்துக் கொண்டார். அந்த அடிப்படையிலேயே முன்னாள் அரசாங்க அதிபரான திருமதி. சார்ள்ஸ் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

தற்போது சிங்களவர் ஒருவரை பிரதம செயலாளராக நியமித்தமை மூலம், தமிழ் ஆளுநர், சிங்கள பிரதம செயலாளர் என்னும் அடிப்படையில் விடயம் கையாளப்பட்டிருக்கின்றது. சிங்களவர் ஒருவரை குறித்த பதவிக்கு நியமிப்பதை எந்த அடிப்படையில் எதிர்ப்பது? தமிழ் மொழி தெரியாத ஒருவர் நிர்வாகத்தை கையாள்வது கடினம் என்னும் அடிப்படையில் எதிர்க்கலாம் - அது தவிர, வேறு வழிகளில் எதிர்க்க முடியுமா? இந்த விடயம் தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இதுவரையில் எந்தவொரு கருத்தையும் தெரிவிக்கவில்லை.

தமிழ் கட்சிகள் இந்த விடயத்தை வேறு விதமாக அணுக வேண்டும். அதாவது, மாகாண சபை தேர்தல் நடத்தப்படாத நிலையில், அரசாங்கம் தன்னிச்சையாக இவ்வாறான பதவிகளை நியமித்து வருகின்றது. எனவே, மாகாண சபை தேர்தல்களை அரசாங்கம் விரைவாக நடத்த வேண்டும். தேர்தலை ஒத்திப் போட்டிருக்கும் நிலையில், வடக்கு, கிழக்கு மகாணங்களில் மேற்கொள்ளப்படும் இவ்வாறான முக்கிய நியமனங்களை இடைநிறுத்த வேண்டும். இந்த அடிப்படையில்தான் தமிழ் கட்சிகளின் எதிர்ப்புக்கள் அமைய வேண்டும். வெறுமனே இது பௌத்த சிந்தனையின் வெளிப்பாடு என்று கூறுவதன் மூலம் இவ்வாறான விடயங்களை கையாள முற்பட்டால் அது பெரியளவில் தாக்கங்களை ஏற்படுத்தாது. ஏனெனில், தமிழர் ஒருவர் ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்கும் நிலையில், சிங்களவர் ஒருவர் பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டமையை பௌத்த சிந்தனை என்று கூறினால் அது வலுவான வாதமாக இருக்காது.

மாகாண சபை நிர்வாகம் இல்லாத நிலையிலேயே அரசாங்கம் மாகாண சபைகளின் அதிகாரத்திற்கு உட்பட்ட பாடசாலைகளை, வைத்தியசாலைகளை மத்திய அரசின் கீழ் கொண்டு சென்றிருக்கின்றது. இந்த நடவடிக்கை மாகாண சபையை பலவீனப்படுத்தும் ஒரு திட்டமிட்ட நடவடிக்கையாகும். மாகாண சபை தேர்தல் ஒத்திப் போடப்பட்டிருக்கும் நிலையில், வடக்கு, கிழக்கில் அரசாங்கம் மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளும் இருக்கின்ற அதிகாரங்களையும் பிடுங்கும் செயல்தான். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தற்போது சிங்களவர் ஒருவர் பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கின்றார். இந்த விடயம் தொடர்பில் மாகாண சபை அதிகாரத்தை பாதுகாக்க வேண்டும் என்பதிலும் உடன்டும் முஸ்லீம், மலையக தலைமைகளுடனும் தமிழ்த் தேசிய கடசிகள் பேச வேண்டும். வெறும் கண்டன அறிக்கைகளை வெளியிடுவதால் எந்த பயனும் இல்லை.

# இந்திய–சீன பிராந்திய கெடுபிடிக்கு களமாகும் இலங்கை!

- அலசுவது இராஜதந்திரி -

இலங்கையைப் பொறுத்தவரை இந்தியாவுடனும், சீனாவுடனும் வரலாற்று ரீதியான தொடர்புகளை பன்னெடுங்காலமாகவே பேணி வருகின்றது. இலங்கையில் தமிழரோ அல்லது சிங்களவரோ இந்தியாவுடனான தமது உறவை தொப்புள் கொடி உறவென்றே குறிப்பிடுவதுண்டு. ஏனெனில், இரு இனத்தவர்களும் இந்தியாவிலிருந்து வந்து இலங்கையில் குடியயேறியமைக்கான வரலாற்றுச்சான்றுகள் பலமாகவே இருக்கின்றன.

இருந்தபோதிலும் கடந்த நான்கு தசாப்த காலங்களில் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் பூகோள ரீதியாக சர்வதேச அரசியல் மற்றும் பொருளாதார துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் என்பவை தொண்ணூறுகளின்பின்னர் சர்வதேச ரீதியில் புதிய பல திருப்பங்களை ஏற்படுத்தியுள்ளன. இதன்காரணமாக நலிவடைந்த நாடுகள் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக பலம் பொருந்திய நாடுகளின் பகடைக்காய்களாக மாறுகின்ற சூழலே தென்பட்டுள்ளது.

இலங்கைகூட இத்தகைய வல்லரசுக் கெடுபிடிகளுக்குள்ளான ஒரு தன்மையே காணப்படுகின்றது. இலங்கையின் வடக்கு - கிழக்கை, பிரிவினைவாத யுத்தம் முப்பது வருட காலம் பெரிதும் பாதித்து விட்டிருந்தது. உள்நாட்டு யுத்தம் இலங்கையயை பாதித்து விடுவதற்கு முன்பதாக "இந்து சமுத்திரத்தின் முத்து" என இலங்கை சர்வதேச சமூகத்தினால் வர்ணிக்கப்பட்டிருந்தது. ஆனால், மூன்று தசாப்த கால யுத்தம் அமைதியே வடிவாக இருந்த இலங்கையை ஆயுத வியாபாரிகளின் சொர்க்க புரியாக மாற்றமடைய வைத்திருந்ததோடு சர்வதேச அரசியலுடனும் பெரிதும் சம்பந்தப்பட வைத்திருந்தது.

**சீனாவின் வளர்ச்சி**

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் ஆரம்பமான காலகட்டங்களில் சீனா பெரிதும் கம்யூனிஸ போக்குடைய நாடாகவும் இன்றிருப்பதுபோல திறந்த பொருளாதாரத்தை கொண்டிராத நாடாகவுமே விளங்கியிருந்தது. ஆனால், இன்றைய சீனா உலகில் ஒரு பெரும் பொருளாதார வல்லரசாக மாற்றங் கண்டுள்ளது.

இதன்காரணமாக தனது வல்லாதிக்கத்தை பொருளாதார ரீதியாக விஸ்தரிக்கும் போக்கை சீனா கையாண்டு வருகின்றது.

சீனாவின் பொருளாதார ரீதியான "வலை வீச்சில்" அகப்பட்ட ஒரு நாடாகவே இலங்கை விளங்குகின்றது. இதன்வெளிப்பாடாக இலங்கையின் தலைநகரில் பிரமாண்டமான முறையில் அமைக்கப்பட்டுவரும் கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி திட்டம் தென்முனையில் அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம் என்பவை விளங்குகின்றன.

இவற்றையடுத்து சீனா வடக்கே கடலட்டை பண்ணைகளை அமைக்கும் நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளமை இந்தியாவை சீனா குறித்து மேலும் சங்கடத்துக்குள்ளாக்கி விட்டிருக்கின்றமையே அவதானிக்க முடிகின்றது.

இலங்கையில் சீனாவின் பிரசன்னம் தனது பிராந்திய நலனுக்கு அச்சுறுத்தலை கொடுப்பதுபோன்ற உணர்வை இந்தியாவுக்கு ஏற்படுத்தியுள்ளதையே அவதானிக்க முடிகின்றது. ஆனால், சீனா இலங்கைக்கு பன்னெடுங் காலமாகவே பிரமாண்டமான நிர்மாணங்களை அமைத்துக்கொடுத்து உதவி வருகின்ற நாடாகவே இருந்து வருகின்றது.

**இந்தியாவின் மிரட்சி**

இருந்தபோதிலும் "இருண்டவன் கண்ணுக்கு மிரண்டதெல்லாம் பேய்" என்பது போல இலங்கையில் சீனாவின் பிரசன்னத்தைக்கூட இந்தியா தனது நலன்களை முதன்மைப்படுத்தி நோக்கி மிரண்டு போயுள்ளதையே காண முடிகின்றது.

மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சீனாவின் உதவியுடன் வடக்கே கடலட்டைப் பண்ணைகளை அமைப்பது குறித்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார். இம்முயற்சி குறித்து கருத்து வெளியிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா , வடக்கின் மூல வளங்களை பயன்படுத்துவதே தமது நோக்கமென்று குறிப்பிட்டுள்ளதோடு எவ்வகையிலும் இந்தியாவுக்கு சங்கடத்தை ஏற்படுத்தும் நோக்கம் தமக்கில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டதில் அர்த்தமிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

வட மாகாணத்தில் விவசாயம் மற்றும் மீன்பிடியைப்பொறுத்தவரையில் வளங்கள் அபரிமிதமாகவே இருக்கின்றன. ஆனால், இவ்வளங்கள் எதுவும் உரிய முறையில் கண்டறியப்பட்டு பயன்படுத்தப்படாதவையாகவே இருக்கின்றன.

யுத்தகாலத்துக்கு முன்பிருந்த கைத்தொழில் வளங்கள்கூட அழித்தொழிக்கப்பட்ட நிலையே காணப்படுகின்றது. எனவே, வடக்கு - கிழக்கு மகாணங்களைப் பொறுத்தவரை குறிப்பாக, வடக்கைப் பொறுத்தவரை அதன் வளங்கள் காலத்துக்கேற்ற நவீனத்துவங்களுடன் வளப்படுதப்பட வேண்டியதே அவசியமானதாகின்றது.

**கடலட்டை பண்ணைகள்**

வடக்கே சீன தொழில் நுட்பத்துடன் கடலட்டைப் பண்ணைகளை அமைப்பதன் மூலம் சிறந்த பயன்பாடுகளைப்பெற முடியும். ஏனெனில், கடலட்டை ஏற்றுமதி பெருவாரி யான வருவாயை ஏற்படுத்திக்கொடுக்கக்கூடிய ஒன்றாகவே இருக்கின்றது. இதற்குரிய தொழில் நுட்பத்தில் சீனர்கள் கைதேர்ந்தவர்களாகவே இருக்கின்றனர்.

கடலட்டை உற்பத்தியில் மட்டுமல்ல. ஏனைய கடலுணவு உற்பத்திகளில்கூட பண்ணைகள் அமைத்து வருவாய் ஈட்டுவதை சீனா , சிங்கப்பூர் போன்ற நாடுகள் விரிவான முறையில் மேற்கொண்டு பயனடைந்து வருகின்றன.

எனவே, இவ்விடயத்தை இந்தியா தனது பிராந்திய நலனை முதன்மைப்படுத்தி நோக்காது இலங்கையின் வடபகுதி மக்களின் நலன்கருதியதாக நோக்க வேண்டியதே அவசியமானதாகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜூலை - 26 திங்கட்கிழமை
பிலவ வருடம் - ஆடி 10
நல்ல நேரம் : 6.00 - 7.30
ராகு காலம் : 7.30 - 9.00
திதி : திரிதியை




**மேடம்**
அனைத்தும் சுமுகமாக நடைபெறும். கவலை தீரும். தடைகள் விலகும். வெற்றி பெற சிந்தித்து செயல்பட வேண்டும். முன்னேற்றம் காண்பீர்கள். குடும்பத் தேவை நிறைவேறும்.

**இடபம்**
பிள்ளைகள் வளர்ச்சி காண்பர். நல்ல செய்தி வந்து சேரும். பிரபல நிறுவனங்களிலிருந்து புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். உறவினர்களால் நன்மை. குடும்பத்தில் ஒற்றுமை பலப்படும்

**மிதுனம்**
அழகுணர்ச்சி அதிகரித்து மகிழ்வீர்கள். பகையை மறப்பீர்கள். பணிகளில் கவனமாகச் செயல்படுங்கள். யாரையும் வெறுக்க வேண்டாம். குடும்பத்தினர் திருப்திக்காக செலவழிப்பீர்கள்.

**கடகம்**
எதிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். சிக்கனம் அவசியம். குடும்பத்தில் சச்சரவு முடிவுக்கு வரும். பெரியவர்களின் அன்பும் ஆசியும் உண்டு. வார்த்தைகளை முழுமையாக நம்ப வேண்டாம்.

**சிம்மம்**
பணியாளர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்க வாய்ப்புண்டு. கோபத்தைக் குறைப்பது நல்லது. நண்பர்களால் நன்மை அடைவீர்கள். முக்கியமான விஷயங்களில் எந்த அவசரமும் காட்ட வேண்டாம்.

**கன்னி**
ஏற்றம் மிகுந்த நாள் இது. குடும்பத்தில் அமைதி தவழும். நல்ல விஷயங்களுக்காகப் பாடுபடுவதில் தடைகள் வரலாம். சிரமங்கள் தோன்றி மறையும். உடல்நிலை சீராகும்.

**துலாம்**
குடும்பத்தில் இருந்த குழப்பம் தீர்ந்து நிம்மதியுடன் இருப்பீர்கள். அரசாங்க உதவி கிடைக்கும். பதவி உயர்வு. எச்சரிக்கையுடன் செயல்பட்டு வருவீர்கள். மனைவி,கணவரால் நன்மை ஏற்படும்.

**விருட்சிகம்**
கவலைகள் குறையும். உடல்நலனில் கவனம் செலுத்துங்கள். பயணத்தின் போது தொல்லைகள் உண்டாகலாம். செலவு கூடும். கடன் குறையும். முன்பு செய்த தீர்மானங்களை நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு**
விளையாட்டுப் போக்காய் நிறையப் பணிகளைச் செய்து முடிப்பீர்கள். பழி தரும் செயலை விலக்குங்கள். வீண் வாக்குவாதங்கள் வேண்டாம். சிந்தித்து முடிவு எடுங்கள். நிதானம் மிக அவசியம்.

**மகரம்**
திட்டமிட்ட பணிகளைத் தள்ளிப் போட வேண்டாம். செல்வாக்கு உயரும். பேச்சில் சாதுர்யம் வெளிப்படும். புதிய தொழில் முயற்சி வெற்றி பெறுவதில் தாமதம் ஏற்படும்.

**கும்பம்**
இளம் வயதினர் கூடுதல் கவனத்துடன் இருக்க வேண்டும். மற்றவ ர்குடும்ப விஷயங்களில் தலையிட்டு பிரச்னை வர வாய்ப்புண்டு. உங்கள் வேலைகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காதீர்கள்.

**மீனம்**
நன்மைகள் பல நடைபெறும். பொறுப்புகளை நிறைவேற்றுவீர்கள். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவீர்கள். செலவு அதிகரிக்கும். தாய்வழி உறவினர்களிடம் நெருக்கம். நிதி நிலை மேம்படும்.

# பன்னீர்ச்செல்வம் திடீர் டில்லி விஜயம் சசிகலா குறித்து பா.ஜ.கவுடன் பேசுவார்?



சென்னை, ஜூலை 26

அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் முதல்வருமான ஓ.பன்னீர் செல்வம் நேற்றுக் காலை சென்னையில் இருந்து விமானம் மூலம் புதுல்லி புறப்பட்டுச் சென்றிருக்கிறார். புது டில்லியில் முக்கியமான பேச்சுக்களை நடத்துவதற்கு பன்னீர்ச் செல்வம் திட்டமிட்டிருப்பதாகவும், சசிகலா விவகாரம் முக்கியமாகப் பேசப்படும் எனவும் சென்னை வட்டாரங்கள் தெரிவித்தன.

சசிகலா அ.தி.மு.கவில் இணைவது பற்றி எடப்பாடி எதிர்மறையாக தொடர்ந்து கருத்து தெரிவித்து வரும் நிலையில் ஓ.பன்னீரோ, “அம்மாவுடன் 30 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்திருக்கிறார். அவர் மேல் எங்களுக்கு நல்லெண்ணம் உள்ளது. இதே நடைமுறை (ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர்) தொடர்வதை ஏற்றால் அவர் அ.தி.மு.கவுக்குள் திரும்புவது பற்றி பரிசீலிக்கலாம்” என்றும் கூறியிருந்தார் ஓபிஎஸ்.

இந்தப் பின்னனியில்தான் ஓ.பன்னீர் செல்வம் நேற்று புது டில்லி புறப்பட்டுச் சென்றுள்ளார். “போனவாரமே இந்தப் பயணத்துக்கு திட்டமிட்டிருந்தார் ஓபிஎஸ். ஆனால் டில்லியில் இருந்து சமிஞை கிடைத்ததை ஒட்டி புறப்பட்டுச் செல்கிறார். டில்லியில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, பிரதமர் மோடி உள்ளிட்டோரை சந்திக்க நேரம் கேட்டிருக்கிறார். மேகதாது பிரச்சினை உள்ளிட்ட சில விஷயங்களை வெளிப்படையாக பேசினாலும் சசிகலா விவகாரம் தான் பன்னீர் டில்லி பயணத்தின் முக்கிய விவகாரமாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

“அன்றைக்கு எப்படி ஓபிஎஸ்சையும், எடப்பாடியையும் டில்லி சேர்த்து வைத்ததோ அதேபோல இன்று சசிகலாவையும் அ.தி.மு.கவையும் சேர்த்து வைக்கும் இணைப்புக்கான சாவி டில்லியிடம்தானே இருக்கிறது” என்கிறார்கள் சென்னை அரசியல் விமர்சகர்கள். பன்னீரின் டில்லி நிகழ்வுகள் அதிமுகவுக்குள் அதிர்வுகளை ஏற்படுத்தலாம் எனவும் அவர்கள் எதிர்வுகூறுகின்றார்கள்.

# லாட்டரி சீட்டை மீண்டும் கொண்டுவர தமிழக அரசு முயற்சிசெய்யக் கூடாது

## வலியுறுத்துகின்றார் எடப்பாடி பழனிச்சாமி



சென்னை, ஜூலை 26

லாட்டரி சீட்டை மீண்டும் கொண்டுவர அரசு முயல வேண்டாம் என, அ.தி.மு.க. இணை ஒருங் கிணைப்பாளரும் தமிழக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனி சாமி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

ஒரு உன்னத நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட லாட்டரி சீட்டு திட்டத்தில் கருணாநிதி தமிழகத்தின் முதல்வராக இருந்த போது, தனியாரை நுழைய அனுமதித்து லாட்டரி சீட்டு திட்டத்தையும் சீரழித்தார். அப்போது தான் வெளிமாநில லாட்டரிகள் தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

ஒரு சீட்டின் விலை 10 ரூபாய் என்றும், பரிசு ஒரு கோடி ரூபாய் என்றும் மக்களிடையே பேராசை தூண்டப்பட்டது. ஒரு ரூபாய்க்கு ஒரு லட்சம், மாதம் ஒருமுறை குலுக்கல் என்ற நிலை மாறி, ஒரு நம்பர் லாட்டரி முதல் பல கோடி ரூபாய் வரை பரிசு என்று ஒரு நாளைக்கு குறைந்தது 50 விதமான லாட்டரிகள் விற்பனை தமிழகத்தில் நடைபெற்றது.

ஜெயலலிதாவின் ஆட்சியில், ஏழை, எளிய மக்கள், பல ஆண்டுகளாக லாட்டரி அரக்கனின் பிடியில் இருந்து தப்பி நல்வாழ்வு வாழ்ந்து வருகிறார்கள். இந்நிலையில், மக்களின் தலையில் மண்ணை வாரிக்கொட்ட, சந்தர்ப்பவசத்தால் தற்போது பதவியில் அமர்ந்துள்ள தி.மு.கவின் விடியா அரசு முடிவு செய்துள்ளதாகத் தகவல்கள் வருகின்றன.

ஆட்சிக்கு வருவதற்கு முன், அரசுக்கு வருவாயைப் பெருக்கும் வழி எங்களுக்குத் தெரியும் என்று கொக்கரித்த இவர்கள், லாட்டரி சீட்டை மீண்டும் கொண்டுவந்து நாட்டை சுடுகாடாக்க முடிவு செய்துள்ளது மிகவும் கண்டிக்கத்தக்கது.

# தமிழக உள்ளூராட்சி தேர்தல்கள் டிசெம்பருக்குள் நடத்தப்படும்

## தமிழக அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு



சென்னை, ஜூலை 26

தமிழகத்தில் வரும் டிசம்பர் மாதத்துக்குள் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படும் என தமிழக ஊரக வளர்ச்சித் துறை மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

தூத்துக்குடியில் நடந்து வரும் ஸ்மார்ட் சிட்டி திட்டப் பணிகளை அமைச்சர் கே.என்.நேரு நேற்று ஆய்வு செய்தார். இதனையடுத்து, அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர்களிடம் கூறியதாவது,

நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலை விரைவில் நடத்த தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார். சட்டசபை தேர்தலில் தி.மு.க. அறிக்கையில், சில நகரங்கள் மாநகராட்சியாகவும், சில இடங்கள் நகராட்சியாகவும் தரம் உயர்த்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை முதல்வர் அறிவித்த பின்னர், சுழற்சி முறை இட ஒதுக்கீடு முறைப்படுத்தி, பருவ மழைக் காலம் முடிந்தவுடன் தேர்தல் அறிவிக்கப்பட்டு டிசம்பர் மாதத்துக்குள் முடிக்கப்படும். திருச்செந்தூர் பேரூராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்துவது குறித்து முதல்வர் அறிவிப்பார். என்று அவர் தெரிவித்தார்.

# வெலிக்கடைப் படுகொலை நினைவேந்தல் நிகழ்வு





யாழ்ப்பாணம், ஜூலை 26

வெலிக்கடை சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட குட்டிமணி மற்றும் தலைவர் தங்கத்துரை ஆகியோரின் 38ஆவது நினைவேந்தல் நிகழ்வு, யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ்த் தேசியக் கட்சியின் அலுவ லகத்தில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது படுகொலை செய்யப்பட்டவர்களது திருவுரு வப் படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, விளக்கேற்றி அஞ்சலி செய்யப்பட்டது.

குறித்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ஸ்ரீகாந்தா, தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜி லிங்கம் மற்றும் வல்வெட்டித்துறை நகர சபையின் தவிசாளர் கனகேந்திராசா ஆகியோர் கலந்துகொண்டனர். (இ - 03)

## 11 வயது சிறுவனுக்கு டெல்டா தொற்று உறுதி

கொழும்பு, ஜூலை 26

பேருவளை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 11 வயது சிறுவனுக்குக் கொரோனா வைரஸ் தொற்றின் திரிபான டெல்டா வைரஸ் தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆர்.ஜே. சிங்கபாஹூ தெரிவித்தார்.

பேருவளை ஹிரிக் கொடெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த மேற்படி சிறுவன் காலி பிரதேசத்திலுள்ள அரச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மேலும் கூறினார். (இ)

# டெல்டா வைரஸ் தொற்றையடுத்து ஆடைத்தொழிற்சாலைக்குப் பூட்டு!

## பேராபத்தை எதிர்நோக்கியுள்ளது கொழும்பு



**கொழும்பு, ஜூலை 26**

**டெல்டா வைரஸ் தொற்றாளர்கள் எழுவர் இனங்காணப்பட்டதையடுத்து கொழும்பு, கெஸ்பாவை ஐபுரளிய, லுல்லவல வீதியிலுள்ள ஆடைத் தொழிற்சாலையை 10 தினங்களுக்குத்தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனக் கெஸ்பேவ பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி சமந்திகா விஜேசுந்தர தெரிவித்துள்ளார்.**

குறித்த தொழிற்சாலையில் 7 பேருக்கு டெல்டா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை, மேலும் 121 ஊழியர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் குறிப் பிட்டார்.

டெல்டா வைரஸ் தொற்றாளர்கள் தொடர்ச்சியாக இனங்காணப்பட்டு வந்ததை யடுத்து தொழிற்சாலையில் 166 ஊழி யர்கள் எழுமாறான பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இதையடுத்து தொழிற்சாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.(இ)

# இராணுவ ஆட்சிக்கு முடிவு கட்டுவோம்!

## அனைவருக்கும் அநுரகுமார அழைப்பு

கொழும்பு, ஜூலை 26

"இலங்கையில் மிகக் குறுகிய காலத்தில் ராஜபக்ச அரசின் மீதான மக்கள் எதிர்ப்பு அதிகரித்துள்ள நிலையில், அதனைக் கட்டுப்படுத்த அரசு இராணுவ அடக்குமுறையைக் கையாளுகின்றது. எனவே, நாடு இராணுவ ஆட்சியின் பக்கம் பயணிப்பதை அனைவரும் ஒன்றிணைந்து தடுக்க வேண்டும். நாட்டில் மாற்றம் ஒன்று கட்டாயம் தேவை."

- இவ்வாறு ஜே.வி.பியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"பொதுமக்கள் உரிமைகளைக் கட்டுப்படுத்தும் சட்டங்களை அரசு உருவாக்கி வருகின்றது.

இலங்கையில் முன்னரை விட மிக மோசமான முறையில் குடும்ப ஆட்சி இப்போது வலுப்பெற்றுள்ளது.

ஒரே நாடு - ஒரே சட்டம் என்ற வாக்குறுதிகளை வழங்கிய ராஜபக்சவினர் இன்று அதனைத் தவுடுபொடியாக்கி விட்டனர்.

நாட்டின் பொருளாதார வீழ்ச்சி மக்களிடையே மிகப் பெரிய அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.



இலங்கையில் மீண்டும் இனவாத அரசியலை அரசு கையில் எடுத்துச் செயல்பட ஆரம்பித்துள்ளது. எனவே, நாட்டில் மாற்றம் ஒன்று கட்டாயம் தேவை.

புதிய மாற்றத்துக்கான அணியொன்றை உருவாக்கும் ஆக்கபூர்வமான செயல்பாடுகளை நாம்முன்னெடுத்து வருகின்றோம். அதற்கு மக்கள் ஒத் துழைக்க வேண்டும்" - என்றார். (இ)

# எதிரணிக் கூட்டணியிலிருந்து ரிஷாத்தை வெளியேற்றுங்கள்

## சஜித்திடம் டிலான் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 26

"ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியிலிருந்து ரிஷாத் பதியுதீனை வெளியேற்றுவதற்கு கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்."

- இவ்வாறு ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா வலியுறுத்தினார்.

அவ்வாறு செய்துவிட்டு, நீதிக்காக குரல் கொடுப்பதே பொருத்தமான செயற்பாடாக அமையும் எனவும் அவர் கூறினார்.

அதேவேளை, ஹிஷாலினி



யின் மரணத்துக்கு நீதி பெற்றுக் கொடுக்கப்படும் என்றும், குற்றவாளிகள் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள் என்றும் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷா ந்த தெரிவித்தார். (இ)

# பி.சி.ஆர். சோதனை திட்டமிட்டு குறைப்பு

## தேசிய தொழிற்சங்க முன்னணி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 26

"நாட்டில் நாளாந்தம் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையை அரசு திட்டமிட்டுகுறைத்துள்ளது."

- இவ்வாறு தேசிய தொழிற்சங்க முன்னணியின் தலைவர் சமன் ரத்னப்பிரிய குற்றஞ்சாட்டினார்.அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"கடந்த பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடும்போது, நாளாந்தம் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகள் 50 வீதமாகக் குறைவடைந் துள்ளன.

பி.சி.ஆர். பரிசோதனைகள் குறைவடைந்ததால், பதிவாகும் நாளாந்த நோயாளர்களின் எண்ணிக்கை மூவாயிரத் திலிருந்து குறைவடைந்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதத்தில் நாளாந்தம் 23 ஆயிரம் பி.சி. ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது 12 ஆயிரம் பரிசோதனைகளே மேற்கொள்ளப்படுகின்றன.

அதனால்தான் தற்போது நாளாந்தத் தொற்றாளர்கள் 1,500 அல்லது 1,700 ஆக அடையாளம் காணப்படுகின்றனர். எனினும், சமூகத்தில் நோய்த் தொற்றுக்கு உள்ளானவர்கள் அதிகளவில் இருக்க முடியும்" - என்றார். (இ)

# உயர்கிறது 'டெல்டா'!

## 4ஆவது அலை அபாயம் அதிகரிப்பு



**கொழும்பு, ஜூலை 26**
**நாட்டில் டெல்டா வைரஸினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 68 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.**

இந்த நிலை தொடருமானால் இலங்கையில் 4ஆவது கொரோனா அலை பரவக் கூடும் என அவர் எச்சரித் துள்ளார்.

எனவே, நாட்டு மக்கள் சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, தற்போதைய மூன்றாவது அலையைக் கட்டுப்படுத்த பொறுப்புடன் செயல்பட வேண்டுமென அவர் வலியுறுத் தினார்.

மேலும் அவ்வாறு நடந்து கொண்டால் மாத்திரமே 4ஆவது கொரோனா அலையை கட்டுப்படுத்தலாம் எனவும் அவர் தெரிவித்தார்.



# வைத்தியசாலைக்கு வந்த ரஞ்சன்!

கொழும்பு, ஜூலை 26
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க அங்குனகொலபெலெச சிறைச்சாலையில் இருந்து தங்காலை ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டார்.

அவர் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

ஏறக்குறைய ஒரு மணி நேரம் வைத்தியசாலை அறையில் தங்கியிருந்த ரஞ்சன் ராமநாயக்க மீண்டும் அங்குனகொலபெலெச சிறைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் திலீப் வெதராச்சியும் அங்கு வந்திருந்தார்.

ஊடகங்களிடம் பேசிய திலீப் வெதராச்சி, ஜனாதிபதி கோட்டபய துமிந்த சில்வாவுக்கு மன்னிப்பு வழங்கியதோடு, அவரை வீடமைப்பு அதிகாரசபையின் தலைவராகவும் நியமித்ததைப் போலவே ரஞ்சன் ராமநாயக்கவுக்கு மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்று கூறினார்.

# முக்கிய தடயப் பொருட்கள் ரிஷாத்தின் வீட்டில் சிக்கின!

கொழும்பு, ஜூலை 26
பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் வீட்டில் சிறுமி உயிரிழந்த விவகாரம் தொடர்பிலான தொடர் விசாரணையின் பின்னர் நேற்று சில தடயப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ரிஷாத் பதியுதீனின் மனைவி, மாமனார் உட்பட்ட 30 பேரிடம் தொடர் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில்,

நேற்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் பேராசிரியர் முதித்த விதான பத்திரண உள்ளிட்ட அதிகாரிகள் ரிஷாத் பதியுதீன் வீட்டில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போதே சில முக்கியமான தடயப் பொருட்கள் சிக்கியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், மண்ணெண்ணெய் போத்தல் ஒன்று, லைட்டர் ஒன்று, எரிந்த நிலையில் மீட்கப்பட்ட ஒரு சோடி பாதணி என்பன தடயங்களாக அடையாளப்படுத் தப்பட்டிருக்கின்றன.

குறித்த தடயப் பொருட்கள் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணையைத் தொடங்கியிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது அவரது உடலில் 75 வீதமான பாகங்கள் எரிந்த நிலையில் காணப்பட்டமையால் அவரிடம் வாக்குமூலம் பெற முடியவில்லை என்று பொலிஸார் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் இளைஞர் குழு மதுபோதையில் அட்டகாசம்

## பெண் உட்பட நால்வர் வைத்தியசாலையில்!

வவுனியா, ஜூலை 26
வவுனியா ஈச்சங்குளம் பகுதியில் மதுபோதையில் சென்ற இளைஞர் குழுவினர் தாக்கியதில் பெண் உட்பட நால்வர் காயமடைந்தநிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்- நேற்று மாலை குறித்த பகுதியில் மது போதையில் நின்றிருந்த ஐந்து பேர் கொண்ட இளைஞர் குழுவினர் அப்பகுதியில் நின்ற பொதுமக்கள் மீது சரமாரியாக தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றனர்.

சம்பவத்தில் பெண் உட்பட நால்வர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய இருவரை ஈச்சங்குளம் பொலிஸார் கைதுசெய்துள்ளதுடன், விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த நபர்களால் இவ்வாறான சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# மட்டக்களப்பு விபத்தில் ஒருவர் படுகாயம்

மட்டக்களப்பு, ஜூலை 26
மட்டக்களப்பு- மண்டூர் கோபுர சந்தியில் இரண்டு கார்கள் நேருக்கு நேர் மோதியதில் ஏற்பட்ட விபத்தில், ஒருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் ஒரு கார் பலத்த சேதத்துக்கு உள்ளாகியுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த சம்பவத்தில் காயமடைந்தவர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மேலும் 937 பேர் குணமடைவு!

கொழும்பு, ஜூலை 26
கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 937 பேர் பூரண குணமடைந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 67 ஆயிரத்து 602 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரை கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 94 ஆயிரத்து 850 ஆக பதிவாகியுள்ளது.

இதேநேரம், தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 54 ஆக பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவிலிருந்து கடல் வழியாக யாழ்ப்பாணம் வந்த இருவர் கைது

## படகோட்டிகளும் தனிமைப்படுத்தப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஜூலை 26
தமிழகத்தில் இருந்து சட்டவிரோதமாக இலங்கைக்குள் நுழைந்த 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். தமிழகத்தில் தங்கியிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவரும், அவர்களை ஏற்றி வந்த அல்லைப்பிட்டியை சேர்ந்த இருவருமே கைதாகினர்.

யாழ்.வைத்தியசாலை வீதியை சேர்ந்த ஒருவரும், அரியாலையை சேர்ந்த ஒருவருமே இந்தியாவிலிருந்து திரும்பினர். அவர்கள் இந்திய மீனவர்களின் படகில் வந்து, பின்னர் அல்லைப்பிட்டி மீனவர்களின் படகில் கரையை அடைந்துள்ளனர்.

4 பேரும் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இது குறித்து இந்திய ஊடகங்கள் தரப்பில் வெளியான செய்தியில்,

சமீபகாலமாக இலங்கையைச் சேர்ந்த மக்கள் சட்டவிரோதமாக தமிழகம் வந்து தமிழகத்தில் இருந்து கனடா செல்வதற்காக முயற்சி செய்து வருகின்றனர். இந்நிலையில் இலங்கை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஹமில்டன் என்பவர் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி சட்டவிரோதமாக தமிழகம் வந்து பின் பெங்களூரில் இருந்து விமானம் மூலமாக கனடா செல்வதற்காக பெங்களூர் விமான நிலையம் சென்ற போது அவர் வைத்திருந்த கடவுச்சீட்டு போலியானது என கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டு பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டார்.

இவர் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பிணையில் விடுவிக்கப்பட்டதையடுத்து இலங்கைக்கு தப்பி செல்ல தமிழகத்தில் சட்டவிரோதமாக தங்கி வந்துள்ளார்.

மேலும் கடந்த 13ஆம் திகதி யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஸ்ரீராஜ் கனடா செல்வதற்காக சட்டவிரோதமாக படகில் வந்து நாகப்பட்டினத்தில் தங்கி இங்கிருந்துள்ளார். ஆனால் கடவுச்சீட்டு பெறுவதற்கு போதிய பணம் இல்லாததால் ஸ்ரீராஜும், பெங்களூரில் இருந்து விடுதலை செய்யப்பட்ட ஹமில்டன் ஆகிய இருவரும் கடந்த 20ஆம் திகதி இரவு நாகப்பட்டிணம் கோடியக்கரையில் இருந்து சட்டவிரோதமாக இலங்கை யாழ்ப்பாணத்துக்கு சென்றுள்ளனர்.

இவர்களை அல்லைப்பிட்டி தீவில் வைத்து கடற்படையினர் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# ஒரு கோடியே 21 இலட்சத்துக்கும் மேற்பட்ட தடுப்பூசிகள் இதுவரை இலங்கைக்கு வந்தன

கொழும்பு, ஜூலை 26
இலங்கைக்கு இதுவரை 1 கோடியே 21 இலட்சத்து 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட கொரோனா தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அவற்றுள் நூற்றுக்கு 72 சதவீதமானவை அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்டவை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதற்காக இலங்கை ரூபாவில் 1,546 கோடி செலவழித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேநேரம், எதிர்காலத்தில் சீனாவிடம் இருந்து 16 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள் அன்பளிப்பாக கிடைக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை இதுரை 80 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகளும் 5 இலட்சம் அஸ்ட்ரா செனேகா தடுப்பூசிகளும் 180,000 ஸ்புட்னிக் வீ தடுப்பூசிகளும் 115,830 பைஸர் தடுப்பூசிகளையும் கொள்வனவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டவரைவுக்கு எதிராக உடன்படிக்கை

கொழும்பு, ஜூலை 26

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்திற்கு எதிராக உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

41 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் இந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளனர்.

அதன்படி, ஆசிரியர், அதிபர் சங்கங்கள், முன்னிலை சோஷலிச கட்சி, அனைத்து பல்லைக்கழக மாணவர் ஒன்றியம் உள்ளிட்ட 41 தொழிற்சங்களின் பிரதிநிதிகளே இவ்வாறு கையெழுத்திட்டுள்ளனர்.

# 30 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் செப்ரெம்பருக்குள் தடுப்பூசி ஏற்றல்

### அதன் பின்னர் நாடு முழுயையாகத் திறக்கப்படும்



**கொழும்பு, ஜூலை 26**

**30 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் செப்ரெம்பர் மாதத்திற்குள் கொவிட்-19 தடுப்பூசி போடப்படும் என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.**

அதன்பிறகு நாடு முழுமையாகத் திறக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நாட்டில் கோவிட்-19 நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் கோவிட்-19 தடுப்பூசி போடப்படாத நபர்கள் என்பது தெரிய வந்துள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருத்துவர் அசெல குணவர்த்தன தெரிவித்தார்.

# மழையுடனான காலநிலை நாட்டில் மேலும் அதிகரிக்கும்

கொழும்பு, ஜூலை 26

நாட்டில் தென்மேற்கு பருவப் பெயர்ச்சி நிலைமை தொடர்ந்தும் இயங்குநிலையில் உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலை மேலும் அதிகரிக்குமென தெரிவிக்கப்படுகிறது.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேபோல ஊவா மாகாணத்திலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் ஓரளவு பலத்தகாற்று வீசக்கூடுமெனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# தடுப்பூசி பெறாதவர்களே அதிகம் உயிரிழக்கின்றனர்

### சுகாதார அமைச்சு கூறுகிறது

கொழும்பு, ஜூலை 26

இலங்கையை பொறுத்தமட்டில் தடுப்பூசி பெறாதவர்களே கொரோனா தொற்றினால் அதிகமாக உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

முதலாவது கொரோனா அலையினால், நாட்டில் 13 உயிரிழப்புகள் மாத்திரமே பதிவாகியிருந்ததாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அதேபோல, இரண்டாவது அலையில் 591 உயிரிழப்புகள் பதிவாகியிருந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் ஆரம்பமான கொரோனாவின் மூன்றாவது அலையில் மாத்திரம் 3,450 பேர் உயிரிழந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# சமையல் எரிவாயு சிலிண்டரின் மாவட்ட ரீதியில் நிர்ணய விலை

கொழும்பு, ஜூலை 26

நாட்டில் சந்தையில் விற்கப்படும் அனைத்து சமையல் எரிவாயு சிலிண்டர்களின் எடையை கிலோ கிராமில் காண்பிப்பது கட்டாயமாக்குகிறது.

இதுதொடர்பில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அதிசிறப்பு வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் 18 லீற்றர் (9.6 கிலோ) சமையல் எரிவாயு சிலிண்டரின் அதிக பட்ச சில்லறை விலை ஆயிரத்து 150 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் ஆயிரத்து 259 ரூபாவாகவும் வவுனியா மாவட்டத்தில் ஆயிரத்து 216 ரூபாவாகவும் கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 243 ரூபாவாகவும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 242 ரூபாவாகவும் மன்னார் மாவட்டத்தில் ஆயிரத்து 234 ரூபாவாகவும் திருகோணமலை மாவட்டத்தில் ஆயிரத்து 217 ரூபாவாகவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயிரத்து 250 ரூபாவாகவும் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# பயணக் கட்டுப்பாடுகள் தளர்வு குறித்து மீள்பரிசீலனை அவசியம்

### சிறப்பு மருத்துவர்கள் சங்கம் வலியுறுத்து



கொழும்பு, ஜூலை 26

நாட்டில் பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட விதம் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்று சிறப்பு மருத்துவ வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர், மருத்துவ வல்லுநர் லக்குமார் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அதன்படி, திருமண நிகழ்வுகள் உள்ளிட்டவற்றில் பங்கேற்பவர்களின் எண்ணிக்கை குறைந்தது 50-60 வரம்பில் வைக்கப்பட வேண்டும் அல்லது தற்போதுள்ளதை விட குறைந்த மட்டத்தில் இருக்க வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

டெல்டா திரிபு அடுத்த மாதத்திற்குள் நாட்டில் வைரஸின் பெரும் திரிபாக மாறும் அபாயம் உள்ளது என்றும் சிறப்பு மருத்துவர் வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் குறிப்பிட்டார்.

## வாகன இலக்க தகடுகள் தபால் மூலம் விநியோகம்

கொழும்பு, ஜூலை 26

தபால் திணைக்களத்தின் வருமானத்தை அதிகரிக்க புதிய திட்டத்தை செயல்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அதன் முதல் கட்டமாக, வாகன இலக்க தகடுகளை தபால் மூலம் விநியோகிக்க திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

# காங்கேசன்துறை-வவுனியா இடையே இன்று முதல் தினமும் ஒரு ரயில் சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 26

காங்கேசன்துறை - வவுனியா இடையே இன்று தொடக்கம் சாதாரண வகுப்பு ரயில் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை 5.15 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் ரயில் வவுனியாவை காலை 8.07 மணிக்குச் சென்றடையும். அத்துடன், இன்று மாலை 5 மணிக்கு வவுனியாவிலிருந்து காங்கேசன்துறை நோக்கி அந்தத் ரயில் பயணத்தை ஆரம்பிக்கும் என்று யாழ்ப்பாண ரயில் நிலைய பிரதான அதிபர் ரி.பிரதீபன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு 60 ரூபா கட்டணமும் மாங்குளத்துக்கு 120 ரூபா கட்டணமும் வவுனியாவுக்கு 160 ரூபா கட்டணமும் அறவிடப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

தினமும் காலை 5.15 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்தும் காலை 5.45 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய ரயில் நிலையத்திலிருந்தும் நாவற்குழி, கொடிகாமம் நிலையங்களில் தரித்து கிளிநொச்சி ரயில் நிலையத்தைச் சென்றடையும்.

காலை 6.53 மணிக்கு கிளிநொச்சியிலிருந்து காலை 7.22 மணிக்கு மாங்குளத்திலிருந்தும் புறப்படும் தொடருந்து காலை 8.07 மணிக்கு வவுனியா ரயில் நிலையத்தைச் சென்றடையும். தினமும் மாலை 5 மணிக்கு வவுனியாவிலிருந்து காங்கேசன்துறை நோக்கி ரயில் பயணத்தை ஆரம்பிக்கும் என்றும் யாழ்ப்பாணம் ரயில் நிலைய பிரதான அதிபர் ரி.பிரதீபன் கூறினார்.

அரச, தனியார் மற்றும் வங்கி ஊழியர்களின் நலன் கருதி இந்த சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(அ)

# கொரோனா தடுப்பூசி கோவேக்சின் சர்ச்சை:

# பிரேசில் நிறுவனங்களுடன் ஒப்பந்தத்தை முறித்துக் கொண்ட பாரத் பயோடெக்



இந்தியாவின் பாரத் பயோடெக் நிறுவனம் உருவாக்கி, உற்பத்தியும் செய்யும் கோவேக்சின் தடுப்பூசி கொள்முதல் விவகாரம், பிரேசில் நாட்டில் அரசியல் சர்ச்சையாக தீவிரம் அடைந்திருக்கிறது.

இதன் காரணமாக, அந்த நாட்டில் மருந்து தயாரிக்க இரண்டு நிறுவனங்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டுள்ளதாக பாரத் பயோடெக் நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலக அளவில் கொரோனா பாதிப்புகள் அதிகம் ஏற்பட்ட நாடுகள் வரிசையில் அமெரிக்கா, இந்தியாவுக்கு அடுத்த நிலையில், பிரேசில் உள்ளது. அமெரிக்காவில் 3.44 கோடி, இந்தியாவில் 3.12 கோடி, பிரேசிலில் 1.96 கோடி என்றவாறு பாதிப்பு எண்ணிக்கை உள்ளது. இதில் அதிக உயிரிழப்புகள் பதிவான நாடுகள் வரிசையில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக பிரேசில் 5.48 லட்சம் உயிரிழப்புகளுடன் இரண்டாமிடத்தில் உள்ளது.

இந்த நிலையில், கொரோனா தடுப்பூசி போடும் பணிகளில் ஆரம்பத்தில் மெத்தனம் காட்டிய பிரேசில் அரசு, பிறகு அதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்தியது. இதைத்தொடர்ந்து, இந்தியாவில் ஹைரதாபாதைச் சேர்ந்த பாரத் பயோடெக் நிறுவனத்தின் கொரோனா தடுப்பூசி மருந்தான கோவேக்சினை தங்கள் நாட்டில் விநி யோகம் செய்வதற் கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை பிரேசி லின் பிரெகிசா மெடிகா மென்டோஸ், என்விக்ஸியா மருந்தக நிறுவனம் ஆகியவை பாரத் பயெடெக்குடன் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் செய்து கொண்டன.

### ஊக்கம் கொடுத்த இந்திய அரசு

இந்தியாவின் தேசிய தொற்று நோயியல் நிறுவனம் மற்றும் இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் ஒத் துழைப்புடன் கோவேக்சின் கொரோனா தடுப்பூசி மருந்தை மேம்படுத்தியிருப்பதாக பாரத் பயோடெக் தெரிவித்துள்ளது. இதேவேளை அந்த தடுப்பூசி மருந்தை இந்தியாவிலேயே விநியோகம் செய்ய ஆளும் நரேந்திர மோதி அரசு ஊக்குவித்து வருகிறது.

இந்த நிலையில், இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட இந்த தடுப்பூசி மருந்துக்கு உலகின் சில நாடுகள் இன்னும் ஒப்புதல் வழங்காதபோதும், அந்த தடுப்பூசி மருந்தை பெற சில நாடுகள் ஆர்வம் காட்டி வருகின்றன. அந்த வரிசையில்தான் பிரேசிலின் இரண்டு நிறுவனங்கள் பாரத் பயோடெக்குடன் ஒப்பந்தம் செய்தன.

அந்த ஒப்பந்தத்தின்படி பிரேசில் நிறுவனங்களுக்கு 320 மில்லியன் டாலர்கள் (இந்திய ரூபாய் மதிப்பில் ரூ. 2,375 கோடி) மதிப்பிலான 2 கோடி டோஸ் மருந்துகளை பாரத் பயோடெக் நிறுவனம் வழங்க வேண்டும். தடுப்பூசியை இறக்குமதி செய்வதற்கான ஒத் துழைப்பு நடவடிக்கை, அரசு நிர்வாகத்திடம் உரிமம் பெறுதல், விநியோகம் செய்தல், காப்பீடு, மூன்றாம் கட்ட தடுப்பூசி தயாரிப்பின்போது மருத்துவ நிலையிலான பரிசோதனை மேற்கொள்ளுதல் போன்றவை இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்த முக்கிய அம்சங்கள்.

இந்த நிலையில், இந்த தடுப்பூசி மருந்துக்கான விலையை நிர்ணயம் செய்து கொள்முதல் செய்யும் நடவடிக்கையில் ஆளும் பிரேசில் அரசு நிர்வாகத்தில் உள்ளவர்கள் ஊழல் செய்ததாக அந்த நாட்டில் அரசியல் சர்ச்சை வெடித்தது.

இந்த தடுப்பூசி மருந்து டோஸ் விலையை, உலக நாடுகளுக்கு டோஸ் ஒன்றுக்கு 15 டாலர்கள் முதல் 20 டொலர்கள் வரையிலான கட்டணத்தில் பாரத் பயோடெக் நிர்ணயித்துள்ளது. இதில் பிரேசில் நாட்டுக்கு ஒரு டோஸ் மருந்து 15 டொலர்கள் என்ற அளவில் அரசு நிர்ணயித்தது.






ஆனால், இந்த மருந்துகளை வழங்குவதற்கான எந்த முன்பணத்தையும் இது வரை தாங்கள் பெறவில்லை என்று பாரத் பயோடெக் நிறுவனம் கூறுகிறது. இருப்பினும் இந்த கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்ட விஷயத்தில் ஆளும் பிரேசில் அரசின் நிர்வாகத்தில் இருப்ப வர்கள் ஊழல் செய்ததாக அந்த நாட்டில் சர்ச்சை வெடித்தது. கடந்த சில வாரங்களாக மக்கள் வீதியில் இறங்கி போராட்டத்தில் ஈடுபடவும் காரணமானது.

இந்தியாவில் அனைத்து வித மருந்து தயாரிப்புக்கும் இந்திய மருந்து தலைமை கட்டுப்பாட்டாளர் அலுவலகத்தின் (டிஜிசிஐ)அனுமதியைப் பெறுவதைப் போல, பிரேசில் நாட்டில் தடுப்பூசி மருந்தை வழங்க பிரேசில் தேசிய சுகாதார கண்காணிப்பு ஏஜென்சியான ANVISA என்ற அமைப்பின் ஒப்புதல் அவசியம். அந்த ஒப்பதலை முறைப்படி பெறுவதற்கான பணிகளை படிப்படியாக மேற்கொண்டு கடந்த ஜூன் 4ஆம் திகதி அவசரகால பயன் பாட்டுக்கான அங்கீகாரத்தை பிரேசில் சுகாதாரத்துறையிடம் இருந்து தாங்கள் பெற்றதாக பாரத் பயோடெக் கடந்த மாதம் தெரிவித்தது.

### தகவல் முரண்பாடு சர்ச்சை

ஆனால் பிரேசில் அதிகாரிகளோ, கட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலைகளின் கீழ் கோவேக்சின் தடுப்பூசி மருந்தை விநியோக பயன்பாட்டுக்காக இறக்குமதி செய்ய பிரேசில் தேசிய சுகாதார கண்காணிப்பு ஏஜென்சி அனுமதி வழங்கியதாக அளித்த தகவலை, அவசரகால பயன்பாட்டுக்கான அங்கீகாரத்தை ஜூன் 4ஆம் தேதி பெற்று விட்டதாக கோவேக்சின் நிறுவனம் கோரியதாக தெரிவித்தனர்.

இந்த முரண்பட்ட தகவல்களை சுட்டிக்காட்டிய பிரேசில் சுகாதாரத் துறை அதிகாரி ரிகார்டோ மிராண்டா, குறிப்பிட்ட அந்த தடுப்பூசி மருந்துக்கு நிர்ணயிக்கப்பட்ட 'சந்தேகக்குரிய விலையை' ஏற்றுக் கொள்ள தனக்கு அழுத்தம் தரப்பட்டதாக தெரிவித்தார். இதையடுத்து இந்த விவகாரம் பிரேசில் நாட்டில் தீவிர அரசியல் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்த சூழ்நிலையில், பிரேசில் நாட்டில் அனைத்து சட்ட நடைமுறைகளையும் பூர்த்தி செய்த பிறகே அந்த நாட்டுக்கு தடுப்பூசி மருந்துகள் வழங்கப்படும் என்று பாரத் பயோடெக் நிறுவனம் கூறியது. இந்த விஷயத்தில் தமது தரப்பில் எவ்வித தவறும் நடக்கவில்லை என்று அந்த நிறுவனம் விளக்கம் அளித்தது.

சர்வதேச அளவிலான தமது ஒப்பந்தங்கள் அனைத்தும் அந்தந்த நாடுகளின் சட்ட விதிகளுக்கு உட்பட்டே இருக்கும் என்றும் உயரிய நெறிகள், நேர்மை மற்றும் விதிகளுக்கு கீழ்படிவதை அவை நோக்கமாகக் கொண்டுள்ளன என்றும் பாரத் பயோடெக் நிறுவனம் கூறியுள்ளது.

பிரேசிலில் இரண்டு தனியார் மருந்தக தயாரிப்பு நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களை முறித்துக் கொண்டாலும், கோவேக்சின் மருந்துக்கான ஒப்புதலை அந்நாட்டு மருந்து ஒழுங்குமுறை அமைப்பான யுஏஐளுயு-விடம் இருந்து பெறும் முயற்சிகள் தொடரும் என்று பாரத் பயோடெக் நிறுவனம் தெரிவித்துள்ளது.

- பி.பி.சி.

# கொத்தலாவல பல்கலைக்கழகச் சட்டமூலமும் எதிர்ப்பு நடவடிக்கைகளும்!

நா.யோகேந்திரநாதன்

வெகுவிரைவில் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள நிலையில் பல்வேறு அரசியல், தொழிற்சங்க மட்டங்களிலிருந்து கடும் எதிர்ப்புக் குரல்கள் எழ ஆரம்பித்துள்ளன. ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, முன்னிலை சோஷலிசக் கட்சி ஆகிய எதிர்க்கட்சிகளும் 14 ஆசிரியர் சங்கங்கள், அதிபர் சங்கங்கள் என்பனவும் என்பனவும் பல பொது அமைப்புகளும் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றன.

அவ்வகையில் இச் சட்டமூலத்திற்கு எதிராக அதிபர்கள் தொழிற்சங்கம், ஆசிரியர்களின் தொழிற் சங்கங்கள், கல்விசாரா ஊழியர்கள் தொழிற்சங்கங்கள், பல்கலைக்கழக மாணவர் அமைப்புகள், முன்னிலை சோஷலிசக் கட்சியினர் ஆகிய தரப்பினர் ஒன்றிணைந்து கொழும்பில் ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

இவ்வார்ப்பாட்டத்தைப் பொலிஸார் தடுத்து நிறுத்த முயன்றனர். அதுமுடியாமற் போகவே பொலிஸார் வன்முறைப் பிரயோகம் மேற்கொண்டு ஆர்ப் பாட்டத்தில் கலந்து கொண்டவர்களை விரட்ட முயன்றதுடன் பலரைப் பிடித்து வாகனங்களில் ஏற்றினர். ஆர்ப்பாட்டத் தில் கலந்து கொண்ட ஆசிரியர்களை மட்டுமின்றி ஆசிரியைகளையும் கூட வன்முறைப் பிரயோகம் மூலம் இழுத்துச் சென்று வாகனங்களில் ஏற்றியமையைத் தொலைக்காட்சிச் செய்திகளில் பார்க்கமுடிந்தது.

ஆசிரியர் தொழிற்சங்கத் தலைவர் யோசேப் ஸ்டாலின், முன்னிலை சோஷலிசக் கட்சித் தலைவர் துமிந்த நமகுல, அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத் தலைவர்கள் உட்படப் பலர் கைது செய்யப்பட்டு வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்டனர். அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் அவர்களை நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்தது. ஆனால் பொலிஸார் அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் அவர்களை நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்தது. ஆனால் பொலிஸார் அவர்களை விடுவிக்காமல் தனிமைப் படுத்தல் சட்டங்களை மீறினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் முகாமுக்குக் கொண்டு சென்று 33 பேரைத் தடுத்து வைத்து- அழுத்தங்கள் அதிகரித்தமையால் விடுதலை செய்துள்ளனர்.

அதேவேளையில் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத் தலைவர் உபுல் ரோஹண, ஜோசேப் ஸ்டாலின் உட்பட்டோர் தனிமைப்படுத்தப்பட்டமை தொடர்பாக அவ்விடயம் நீதிமன்ற வழக்கில் தொடர்புபட்டிருப்பதால் தான் எவ்வித அபிப்பிராயமும் தெரிவிக்க விரும்பவில்லையெனத் தெரிவித்ததுடன், யாராவது தனிமைப்படுத்தல் விதிகளை மீறினால் அவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தும்படியும் பொலிஸாருக்கு எவ்வித ஆலோசனையும் வழங்க வேண்டாமெனவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார். அதிலிருந்தே இத் தனிமைப்படுத்தல் நடவடிக்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களைப் பயன்படுத்தி நியாயமற்ற முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதைப் புரிந்து கொள்ளமுடிகிறது.

**"ஒரு பல்கலைக் கழகம் தொடர்பான ஒரு சட்டத் துக்கு ஏன் இவ்வளவு கடுமையான எதிர்ப்புகள் எழுந்துள்ளன என்றொரு கேள்வி எழலாம். இச் சட்டமூலத்தின் பெயர் ஒரு பல்கலைக்கழகத்தின் பெயரில் அமைந்திருந் தாலும் இலங்கையின் சகல பல்கலைக்கழகங் களை மட்டுமின்றி சகல கல்விப் பிரிவுகளையும் உள்ளடக்குகிறது என்பது தான் இவ்வெதிர்ப்புகளுக் கான அடிப்படைக் காரண மாகும்.**




ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி தனிமைப்படுத்தல் சட்டங்களைப் பயன்படுத்தி ஆர்ப்பாட்டங்களைத் தடை செய்யக்கூடாதெனத் தனது கண்டனத்தைத் தெரிவித்திருந்தார்.

ஒரு பல்கலைக்கழகம் தொடர்பான ஒரு சட்டத்துக்கு ஏன் இவ்வளவு கடுமையான எதிர்ப்புகள் எழுந்துள்ளன என்றொரு கேள்வி எழலாம். இச் சட்டமூலத்தின் பெயர் ஒரு பல்கலைக்கழகத்தின் பெயரில் அமைந்திருந்தாலும் இலங்கையின் சகல பல்கலைக்கழகங்களை மட்டுமின்றி சகல கல்விப் பிரிவுகளையும் உள்ளடக்குகிறது என்பது தான் இவ்வெதிர்ப்புகளுக்கான அடிப்படைக் காரணமாகும்.

கொத்தலாவலைப் பாதுகாப்பு பல்கலைக்கழகம் மூலம் அமைக்கப்படவுள்ள அதிகார சபையின் கரங்கள் இலங்கையின் கல்விப் புலமெங்கும் விரிவடையும் தன்மை கொண்டது என்பதுடன் இது இராணுவமயப்பட்ட ஒரு அமைப்பாகும்.

இந்த அதிகார சபையின் கீழ் உயர் கல்வி அமைச்சு, கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, தொழிமுறை தர நிர்ணய நிறுவனம், பல்கலைக்கழக செனட் சபைகள் என அனைத்தும் கொண்டு வரப்படும். அதுமட்டுமன்றி 1978ம் ஆண்டு பல்கலைக்கழகச் சட்டமூலம் இந்த அதிகாரசபையைக் கட்டுப்படுத்தாது.

ஜனாதிபதியால் நியமிக்கப்படும் 10 பேர் கொண்ட இந்த அதிகார சபையில் ஐவர் இராணுவ அதிகாரிகளாகவும் இருவர் பாதுகாப்புச் செயலாளர்களும், மூவர் சிவில் சமூகத்தைச் சேர்ந்த கல்விமான்களாகவும் இருப்பார்கள். பல்கலைக்கழகங்களில் அமைதியின்மை ஏற்படும் சந்தர்ப்பங்களில் உபவேந்தரோ பல்கலைக்கழகத்தின் செனட்டோ அழைக்காத நிலையில் நேரடியாகத் தலையிடும் அதிகாரம் இச் சபைக்கு உண்டு.

இதிலிருந்து பல்கலைக்கழகங்கள் நேரடியாகவே இராணுவ அதிகாரத்துக்கு உட்படுத்தப்படுகின்றன என்பதைப் புரிந்து கொள்ளமுடியும். மாணவர்கள் தங்கள் உரிமைக் கோரிக்கைகளை முன்வைத்தோ அல்லது தங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை எதிர்த்தோ போராட்டங்களை நடத்தினால் நேரடியாகவே இந்த அதிகார சபை தலையிடும் போது இராணுவ ஒடுக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்படும்.

தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவ இச்சபை அனுமதியை வழங்க முடியும். அதேவேளையில் இச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பல்கலைக்கழகங்களுக்கு பட்டங்களை வழங்கும் அதிகாரம் வழங்கப்படும். இதன் காரணமாக வசதிபடைத்த மாணவர்கள் தகுதியில்லாவிடினும் பணம் கொடுத்து பட்டங்களைப் பெறமுடியும். எனவே தகுதியற்றவர்கள் பட்டதாரிகளாக வரும் பட்சத்தில் அவர்களால் வழங்கப்படும் சேவை நாட்டைப் படுபாதாளத்துக்குள் தள்ளும் நிலையும் மக்கள் பலவித துன்பங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையும் ஏற்படுவது தவிர்க்கப்படமுடியாதது.

உயர்கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்பன அதிகார சபையின் இந்த அதிகாரங்கள் மூலமும் அதிகார சபையில் கட்டுப்பாடுகள் கொண்டு வரப்படுவதன் மூலம் செயலிழந்து விடும் நிலையில் உயர் கல்வி இராணுவ அதிகாரத்தின் மூலம் நெறிப்படுத்தப்படும் நிலையும் உருவாகும்.

கல்வி அமைச்சு இவ்வதிகார சபையின் அதிகார வட்டத்துக்குள் கொண்டு வரப்படுவதால், முழுப்பாடசாலைகளின் ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் இச்சபையின் அதிகார நிழல் படிவது தவிர்க்கமுடியாது.

இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்பே சட்டசபையில் கல்வி அமைச்சராயிருந்த டபிள்யூ.கன்னங்கர அவர்கள் இலவசக் கல்வியை அறிமுகப்படுத்தினார். எனினும் தனியார் பாடசாலைகள் ஒரு சிறுதொகையை வசதிக்கட்டணம் என்ற பெயரில் அறவிட்டு வந்தன. 1957 இல் பண்டாரநாயக்க பாடசாலைகளைத் தேசிய மயமாக்கியதன் மூலம் இலவசக் கல்வி முழுமைப்படுத்தப்பட்டது. ரணசிங்க பிரேமதாச பிரதமாயிருந்தபோது இலவசப் பாடப் புத்தகங்கள், இலவசச் சீருடை என்பவற்றை வழங்கியதன் மூலம் ஏழை மாணவர்களுக்கு இருந்த தடைகள் நீக்கப்பட்டன. அதேவேளையில் மகாபொல சீட்டிழுப்பின் மூலம் வரும் வருமானத்தை வசதி குறைந்த பல்கலைக்கழக மாகணவர்களுக்கு வழங்கியதன் மூலம் இலவசக் கல்வியை உயர் கல்வி மட்டத்துக்கும் விரிவுபடுத்தினார்.

இவ்வாறு பல தலைவர்களின் அர்ப்பணிப்பான நடவடிக்கைகள் மூலம் நாட்டின் மூலை முடக்கிலுள்ள கிராமப்புற மாணவர்கள் கல்வி பெறவும், பட்டதாரிகளாக உருவாகவும் உயர் பதவிகளைப் பெற்றுக்கொள்ளவுமான நிலைமைகள் உருவாக்கப்பட்டன.

இவ்வாறு கட்டி வளர்க்கப்பட்ட இலவசக் கல்விக்கு ஆபத்து ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. கல்விப் புலத்துக்குள் தனியார் துறை உள்நுழையும்போது வசதி படைத்தவர்களுக்கு வாய்ப்புகள் உருவாவதும் ஏழைகள் பின் தங்குவதும் தவிர்க்கப்படமுடியாமல் போய்விடும்.

தற்சமயம் கூட பாடசாலை மாணவர்கள் கூட மேலதிகமாகப் பெரும் பணச் செலவில் தனியார் நிறுவனங்களில் கல்வி பெறவேண்டிய தேவை எழுவதை அவதானிக்க முடியும். தனியார் கல்வி நிலையங்கள் பட்டங்களை வழங்கும் வகை செய்யப்படும்போது நிலைமை எவ்வளவு மோசமடையும் என ஊகிக்க முடியும்.

பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் தொடர்பாகத் தாங்கள், மாகாண சபைகள், கல்வியமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு, உயர் கல்வி அமைச்சு என்பன தீர்மானம் எடுக்கும் அதிகாரங்கள் பறிக்கப்பட்டு இராணுவ மயப்படுத்தப்பட்ட அதிகார சபையிடம் வழங்கப்படும் போது எதிர்காலக் கல்வியே ஆபத்துக்குள்ளாகிவிடும் என்ற அச்சம் தோன்றுவதில் ஆச்சரியப்பட எதுவுமேயில்லை.

எனவே, கொத்தலாவல பல்கலைக்கழக பாதுகாப்பு சட்டமூலம் இலங்கையின் கல்வி முறையையே புரட்டிப் போட்டு இலவசக் கல்வியைச் செயலிழக்க வைத்து வசதி படைத்தவர்களுக்கு வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் அமைந்துள்ளதுடன், முழுமையாக இராணுவ மயப்படுத்தப்படவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அண்மையில் ஒரு பௌத்த அமைப்புடன் ஜனாதிபதி மேற்கொண்ட சந்திப்பின் போது கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குக் கீழ்க் கொண்டு வரப்படுமென வாக்குறுதி அளித்துள்ளார். 1978 ஆண்டின் பல்கலைக்கழகச் சட்டம் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக அதிகார சபையை கட்டுப்படுத்தாது என்ற நிலையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அதன் கீழ் கொண்டு வரப்படுவதால் என்ன பயன் எழுமென்ற கேள்வி எழுவது தவிர்க்கமுடியாததாகும்.

ஆனாலும் இலவசக் கல்விக்கு ஆபத்துவரும் ஒரு நிலைமை தவிர்க்கப்படுமென்பதற்கான எவ்வித அறிகுறியும் தென்படாத நிலையில் ஆசிரியர்கள் போராட்டம் தொடர்வது நியாயமான நடவடிக்கையாகவே தோன்றுகின்றது.

-நன்றி: அருவி

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II

நேரம் - 45 நிமிடம்

48) வித்து முளைத்தலுக்கு அவசியமான காரணிகளின் கூட்டமாக அமைவது
1. நீர், காற்று, வெப்பநிலை
2. மண், காற்று, நீர்
3. மண், சூரிய ஒளி, வெப்பநிலை

49) எமது உடலுழைப்பை வலுவாகக் கொண்டு இயக்கப்படும் போக்குவரத்துச் சாதனம்
1. துவிச்சக்கர வண்டி 2. உந்துருளி 3. மாட்டுவண்டி

50) பற்பசைப் பெட்டியில் காணப்படும் தரச் சான்றுக் குறியீடு.
1. SLS 2. SLDA 3. ISO

51) இலங்கை வாழ் அனைத்து மக்களினதும் பிரதான உணவு
1. பாண் 2. நெல்அரிசிச்சோறு 3. தோசை

52) தெறியோட்டை தைக்கப் பயன்படும் தையல்
1. சங்கிலித் தையல் 2. நரம்புத் தையல் 3. கம்பளித்தையல்

53) இலங்கையின் கிராமிய விளையாட்டுக்களில் ஒன்று
1. கரப்பந்தாட்டம் 2. சடுகுடு 3. கரம்

54) ஆறுகால் உடைய பிராணி
1. நுளம்பு 2. மாடு 3. சிலந்தி

55) மர்ச் செதுக்கல் வேலைப்பாட்டிற்கு புகழ்பெற்ற இடம்
1. சிகிரியா 2. எம்பக்க 3. இசுறுமுனிய

56) அன்னமுன்னா பூக்கும் மாதம்
1. தை 2. கார்த்திகை 3. ஐப்பசி

57) செக்கு பயன்படுத்தப்படுவது
1. ஆணி அறைவதற்கு 2. பாரம் இழுப்பதற்கு 3. எண்ணெய் பிழிவதற்கு

58) தேசப்படத்தில் சரணாலயத்தைக் குறிக்கப் பயன்படும் நியம நிறம் யாது?
1. நீலம் 2. சிவப்பு 3. பச்சை

59) தண்டுத் துண்டுகளை நடுவதன் மூலம் புதிய தாவரத்தைப் பெறக்கூடிய பயிர்
1. சோளம் 2. மரவள்ளி 3. கறிமிளகாய்

60) "இலங்கை எழில் மிகு நாடாகும்" என்பதைத் தலைப்பாகக் கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களிற்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்)

1. ................................................................................................
................................................................................................
2. ................................................................................................
................................................................................................
3. ................................................................................................
................................................................................................

## பயிற்சிப் பரீட்சை - 1
## விடைத்தாள் - 2021
## வினாத்தாள் - I

**தரம் : - 5**

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 1 | 9) 3 | 17) 2 | 25) 3 | 33) 2 |
| 2) 1 | 10) 1 | 18) 3 | 26) 1 | 34) 2 |
| 3) 3 | 11) 3 | 19) 3 | 27) 1 | 35) 3 |
| 4) 2 | 12) 2 | 20) 1 | 28) 1 | 36) 3 |
| 5) 1 | 13) 2 | 21) 1 | 29) 1 | 37) 3 |
| 6) 3 | 14) 2 | 22) 3 | 30) 2 | 38) 3 |
| 7) 2 | 15) 2 | 23) 2 | 31) 2 | 39) 2 |
| 8) 2 | 16) 1 | 24) 3 | 32) 3 | 40) 2 |

(40 x 2.5 = 100 புள்ளிகள்)

## வினாத்தாள் - II

01) i) கடுகண்ணாவ மலைத் தொடர்
ii) நாம் / எமக்கு
iii) தகதக
iv) பாம்புகள் வளைந்து செல்வது போல
v) கை
vi) பாம்புகள் (6 புள்ளிகள்)

02) i) வலப்பக்கமாக
ii) வளமாக்கினர் (2 புள்ளிகள்)

03) கோபத்தைக் கட்டுப்படுத்தக் கற்றுக் கொண்டால் சிறப்பாக வாழலாம் (1 புள்ளி)

04) i) ✓
ii) ×
iii) ✓
iv) × (4 புள்ளிகள்)

05) i) ஆச்சிரமம் / ஆசிரமம்
ii) ஊதாரி (2 புள்ளிகள்)

06) i) அவர் தம் கல்வியின் சிறப்புத்தான் என்னே!
ii) அந்தப் பாறையில் குரங்கு, மான், சிங்கம் ஆகியவற்றின் உருவங்கள் கூட செதுக்கப்பட்டுள்ளன. (2 புள்ளிகள்)

07) i) நோயாளி
ii) சிகைக்காய்
iii) சவர்க்காரம்
iv) ஆராய்ச்சி (4 புள்ளிகள்)

08) i) அலைமோதும் போதே தலை முழுகு / காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
ii) இரக்கப் போனாலும் சிறக்கப்போ (2 புள்ளிகள்)

09) i) ஆசிரியர் எனக்குப் பரிசு கொடுத்தார்.
ii) நான் தினமும் காலையில் தண்ணீர் குடிப்பேன் (2 புள்ளிகள்)

10) தீர்க்கும் (1 புள்ளி)

11) i) Ice cream
ii) Spoon (2 புள்ளிகள்)

12) i) விளையாட்டு மைதானம்
ii) வைத்தியசாலை (2 புள்ளிகள்)

13) i) I am drinking water
ii) This is a small car (2 புள்ளிகள்)

# கபிட்டல் மகாராஜா நிறுவனத்தின் பணிப்பாளர் இராஜமகேந்திரன் கொரோனாவால் உயிரிழப்பு



கொழும்பு, ஜூலை 26
சக்தி - சிரச - எம்.ரி.வி. ஊடக குழுமங்களின் உரிமையாளரும் கபிட்டல் மகாராஜா நிறுவனத்தின் கூட்டுப்பணிப்பாளருமான 'கிளி' இராஜமகேந்திரன் காலமா னார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி பத்து நாட்களாக நவலோகா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த இவர், கடந்த மூன்று நாட்களாக கோமா நிலைக்குச் சென்றிருந்தார்.

யாழ்., மானிப்பாயைச் சேர்ந்த மகாதேவா - இராஜேந்திரன் ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்ட மகாராஜா நிறுவனத்தை, 1983ஆம் ஆண்டுக்குப் பின்னர், இராஜேந்திரத்தின் மகன் இராஜமகேந்திரன் நடத்தி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அன்னாரின் மறைவுக்கு 'டான்' ரிவி - 'ஈழநாடு' ஊடக குழுமம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றது. (இ)

# பெண்களுக்கு நீதி கிடைக்க இறுதிவரைப் பாடுபடுவோம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் உறுதி

கொழும்பு, ஜூலை 26

**"இலங்கையில் குழந்தைகள் மற்றும் பெண்கள் சுதந்திரமாக வாழ்வதற்கான சூழல் இல்லாது போகும் நிலை உருவாகி வரும் இந்தச் சந்தர்ப்பத்தில் குழந்தைகள் மற்றும் பெண்களின் பாதுகாப்புக்காக ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ந்தும் முன்னிற்கும். துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்ட மற்றும் உயிரிழந்த பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் நீதி கிடைக்க ஐக்கிய மக்கள் சக்தி இறுதிவரைப் பாடுபடும்."**

- இவ்வாறு அக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கம்பஹா மாவட்ட சமூக ஊடக ஆர்வலர்கள் எதிர்க்கட்சித் தலைவரை நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இந்த அரசு ஆட்சிக்கு வந்த தன் பின்னர் பெண்களுக்கு எதிரான வன்முறை, சிறுவர் துஷ்பிரயோகம் என்பன அதிகரித்துள்ளன.



பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோத்திலும் சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகத்திலும் யார் ஈடுபட்டாலும் அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் இன, மத, மொழி, பதவி நிலை கடந்து தண்டிக்கப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை.

இந்த நாட்டில் தாய்மார்களுக்காகவும் சிறுவர்களுக்காகவும் நாம் எப்போதும் துணை நிற்போம்.

சகலருக்கும் சமமான நீதி கிடைக்க வேண்டும். எனினும், தற்போது நாட்டில் நீதியானது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையில் கிடைக்கின்றது" - என்றார். (இ)

# முல்லைத்தீவு நகரில் ஒட்டப்பட்ட சுவரொட்டி குறித்து விசாரணை

முல்லைத்தீவு, ஜூலை 26
தமிழ்த் தேசிய வீரர்கள் தினம் ஜூலை 25 தொடக்கம் 27 வரை நினைவுகூரப்பட்டு வரும் நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் பல இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இதில் பல சுவரொட்டிகள் பொலிஸாரால் கிழித்து எறியப்பட்டுள்ளதுடன், இது தொடர்பாகக் கண்காணிக்கும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், விசாரணைகளும்முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (டெலோ) கட்சியின் ஏற்பாட்டில், வெலிக்கடை சிறைப்படுகொலையின் போது உயிரிழந்த குட்டிமணி, தங்கத்துரை உள்ளிட்ட 53 அரசியல் கைதிகளின் 38ஆம் ஆண்டு நினைவேந்தலை அனுஷ்டிக்கும் வகையில் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (இ)

# சிறுமி சித்திரவதை: தந்தை, மாமி கைது!

கொழும்பு, ஜூலை 26
நுரைச்சோலைப் பகுதியில் வீடொன்றில் சித்திரவதைக்கு ஆளாகியிருந்த 13 வயதான சிறுமி ஒருவர் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய சிறுமியை சித்திரவதை செய்த குற்றச்சாட்டில் அச்சிறுமியின் தந்தை மற்றும் மாமி ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட இருவரும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் ஒகஸ்ட் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தண்டனை சட்டக் கோவையின் 308 (ஆ) பிரிவுக்கமைய சிறுவர்களை வன்கொடுமைக்கு உட்படுத்துவது குற்றமாகும்என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். அதற்கமைய சந்தேகநபர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் நுரைச்சோலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# முகக்கவசம் அணியாதவர்களை கைதுசெய்ய விசேட நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 26
முகக்கவசம் அணியாமல் பயணிப்பவர்களைக் கைதுசெய்வதற்கான விசேட நடவடிக்கை மேல் மாகாணத்தில் குறிப்பாக கொழும்பு மாவட்டத்தில் இன்று முதல் முன்னெடுக்கப்படவுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதற்காக விசேட பொலிஸ் குழுக்களைப் பணிக்கு அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)

## தனிமைப்படுத்தல் சட்டம் மீறல்:

# 52 ஆயிரத்தைத் தாண்டியது கைதானோர் எண்ணிக்கை

கொழும்பு, ஜூலை 26
நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும்149 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர்சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இந்நிலையில், தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 52 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கைதானவர்களில் 46 ஆயிரம் பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மேலும் 6 ஆயிரம் பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு எதிராக எதிர்வரும் வாரங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

அதேபோன்று மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடு தொடர்ந்தும் அமுலில் உள்ளது.

மேல் மாகாணத்துக்கு உட்பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் 13 இடங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் 7 ஆயிரத்து 644 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

அவர்கள் பயணித்த 4 ஆயிரத்து 120 வாகனங்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இவர்களில் பயணக்கட்டுப்பாட்டு விதிமுறைகளை மீறிப் பயணித்த 153 பேர் அவர்கள் பயணித்த 99 வாகனங்களில் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

பயணக்கட்டுப்பாட்டு விதிமுறைகளைப் பின்பற்றி நடக்குமாறு பொதுமக்களை நாம் கேட்டுக்கொள்கின்றோம்" - என்றார். (இ)

# இ.தொ.காவின் 82 ஆவது அகவை

கொழும்பு, ஜூலை 26
இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் 82ஆவது அகவையை முன்னிட்டு பழைய பாராளுமன்ற வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள இ.தொ. காவின் ஸ்தாபகத் தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இதன்போது இ.தொ.காவின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் மற்றும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி இராமேஸ்வரன், பிரதமரின் பெருந்தோட்டங்களுகான இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் ஆகியோர் மலர்மாலை அணிவித்தனர்.

அத்துடன் இ.தொ.காவின் தலைமையகமான சௌமிய பவனிலும் அமரர் சௌமியமூர்த்திதொண்டமான், அமரர் ஆறுமுகன் தொண்டமான் ஆகியோரின் உருவப் படங்களுக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில், இ.தொ.காவின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர். (இ)



# ஆப்கானிஸ்தானில் மத தலைவர்கள் பெண்கள் என 33 பேர் படுகொலை!

## கைப்பற்றிய பகுதிகளில் தலிபான்கள் வெறிச்செயல்



காபூல், ஜூலை 26

ஆப்கானிஸ்தானில் தாம் கைப்பற்றிய பகுதிகளில் உள்ள 33 பேரை தலிபான் பயங்கரவாதிகள் படுகொலை செய்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் அரசுக்கு எதிரான போரில் ஈடுபட்டு வரும் தலிபான் பயங்கரவாதிகளை ஒடுக்கும் நோக்கில் செயல்பட்டு வந்த அமெரிக்க படையினர் வாபஸ் பெறப்பட்டு வருகின்றனர். இதனால், பல்வேறு பகுதிகளையும் தலிபான்கள் சிறை பிடித்து வருகின்றனர்.

இந்த நிலையில், தலிபான் பயங்கரவாதிகள் சிறை பிடித்த பகுதிகளில் உள்ள 33 பேரை படுகொலை செய்து வெறிச்செயலில் ஈடுபட்டு உள்ளது. அவர்களில் மத பண்டிதர்கள், மூத்த பழங்குடியினர், சமூக ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள், மனித உரிமை பாதுகாவலர்கள் மற்றும் பெண் பத்திரிகையாளர்கள் ஆகியோரும் உள்ளனர்.

இதேபோன்று மாகாண அரசு அதிகாரிகள், பொலிஸார் மற்றும் ராணுவத்தினரின் குடும்ப உறவினர்களையும் சிறை பிடித்து அவர்களை தலிபான்கள் கொன்றுள்ளனர் என்ற அதிர்ச்சி செய்தியும் வெளிவந்துள்ளது.



## கொரோனா பாதிப்பு அதிகரிப்பை தடுக்க ஓமனில் மீண்டும் இரவு நேர ஊரடங்கு

ஓமன், ஜூலை 26

ஓமன் நாட்டில் சமீபத்தில் கொரோனா தொற்று பரவல் அதிகரித்தது. இதனால் தினசரி தொற்றால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்தது. இதையடுத்து ஓமன் சுகாதாரத்துறை, பக்ரீத் விடுமுறையால் மேலும் கூட்டம் கூடுவது அதிகரித்துவிடும் என்பதற்காக முழு ஊரடங்கை அமல்படுத்தியது. தற்போது இந்த ஊரடங்கு நேற்று காலை 4 மணியுடன் நிறைவடைந்தது.

இந்த நிலையில், ஓமன் அரசு நேற்று முதல் இரவு நேர ஊரடங்கு தொடர்ந்து அமலில் இருக்கும் என அறிவித்துள்ளது. அதன்படி, தினமும் மாலை 5 மணி முதல் அதிகாலை 4 மணி வரை பொதுமக்கள் அத்தியாவசிய தேவைகளை தவிர வேறு எதற்காகவும் வெளியில் வர வேண்டாம் என அறிவுறுத்தியுள்ளது.

இந்த நேரங்களில் வர்த்தக நடவடிக்கைகள் எதுவும் இருக்காது. இதேபோல பஸ் போன்ற போக்குவரத்து சேவைகளும் இருக்காது. எனினும் அவசர சேவையான மருத்துவம், மின்சாரம், போலீஸ் போன்ற துறைகளில் பணியாற்றுபவர்களுக்கு இதில் இருந்து விலக்கு அளிக்கப்படும்.

வருகிற 31-ந் தேதி இரவு வரை இரவு ஊரடங்கு அமலில் இருக்கும் என ஓமன் அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## அமெரிக்க அதிகாரிகள் மற்றும் சில நிறுவனங்களின் மீது சீனா தடை!

பீஜிங், ஜூலை 26

உலகின் இரு பெரும் பொருளாதார நாடுகளான அமெரிக்கா மற்றும் சீனா இடையே, கடுமையான மோதல் நிலவுகிறது. இரு நாடுகளின் உறவும், சுமுகமான நிலையில் இல்லை. சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஹாங்காங்கில், சர்ச்சைக்குரிய தேசிய பாதுகாப்பு சட்டத்தை, சீனா, கடந்த ஆண்டு அமல்படுத்தியது.

இதற்கு அமெரிக்கா, கடும் கண்டனம் தெரிவித்தது. இந்த சூழலில் ஹொங்கொங்கில் ஜனநாயகத்தை ஒடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக கூறி ஹொங்கொங்கில் உள்ள சீன அதிகாரிகள் பலர் மீது அமெரிக்கா கடந்த வாரம் பொருளாதார தடைகளை விதித்து. மேலும் அங்கு வணிகம் செய்வதில் உள்ள அபாயங்கள் குறித்து தனது வணிக சமூகத்துக்கு அமெரிக்கா எச்சரித்தது. இதனை சீனா வன்மையாக கண்டித்தது.

இதுகுறித்து சீன வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், "அமெரிக்காவின் சமீபத்திய பொருளாதார தடைகள் ஹொங்கொங் வணிக சூழலை ஆதாரமற்ற முறையில் அழிக்க வடிவமைக்கப்பட்டவை ஆகும். மேலும் அவை சர்வதேச சட்டத்தையும் சர்வதேச உறவுகளில் நிர்வகிக்கும் அடிப்படை விதிமுறைகள் கடுமையாக மீறுகின்றன" என கூறப்பட்டது.

இந்தநிலையில் அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்கு பதிலடியாக அமெரிக்காவின் மூத்த அதிகாரிகள் மற்றும் சில நிறுவனங்கள் மீது சீனா பொருளாதார தடையை விதித்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி டிரம்ப் ஆட்சி காலத்தில் அமெரிக்காவின் வர்த்தக மந்திரியாக இருந்த வில்பர் ரோஸ் உள்பட 7 தனி நபர்கள் மற்றும் நிறுவனங்கள் மீது பொருளாதார தடை விதித்ததாக சீன வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# அவுஸ்திரேலியாவில் கட்டுப்பாடுகளுக்கு எதிராக மக்கள் வீதியில் இறங்கி பேரணி

சிட்னி, ஜூலை 26

அவுஸ்திரேலியாவில் கொரோனா கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் வீதியில் இறங்கி போராட்டம் நடத்தினர். இந்த போராட்டத்தின்போது சொலிஸாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் வெடித்தது.

விக்டோரியா, குயின்ஸ்லாந்து மற்றும் நியூ சவுத் வேல்ஸ் ஆகிய 3 மாகாணங்களிலும் முழு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டு உள்ளது. இந்த நிலையில் அரசின் புதிய ஊரடங்கு கட்டுப்பாடுகளால் கோபமடைந்த மக்கள் அரசுக்கு எதிராக போராட்டத்தில் குதித்துள்ளனர். சிட்னி, மெல்பேர்ன், பிரிஸ்போர்ன் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் நேற்று முன்தினம் ஆயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்தினர்.

சிட்னி நகரில் பேரணியாக சென்ற ஆயிரக்கணக்கான மக்கள் சாலைகளில் அமர்ந்து மறியல் போராட்டத்திலும் ஈடுபட்டனர். போராட்டக்காரர்களில் சிலர் "முககவசத்தை இறக்கி விட்டு உங்கள் குரலை உயர்த்துங்கள்" "ஆஸ்திரேலியாவை தட்டி எழுப்புங்கள்" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் வைத்திருந்தனர்.

இதனிடையே பொலிஸார் போராட்டத்தை கலைக்க முயன்ற போது போராட்டக்காரர்களுக்கும் அவர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. போராட்டக்காரர்கள் பொலிஸாரை நோக்கி தண்ணீர் பாட்டில்கள், கற்கள் உள்ளிட்டவற்றை வீசி எறிந்தனர். இதில் பொலிஸ் அதிகாரிகள் பலர் படுகாயமடைந்தனர். அதேபோல் பொலிஸார் போராட்டக்காரர்களை விரட்டியடித்த போது நடந்த தள்ளுமுள்ளில் பலர் காயமடைந்தனர்.

## தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி உளவுபார்ப்பது கவலை அளிக்கிறது

### அமெரிக்கா

வாஷிங்டன், ஜூலை 26

பெகாசஸ் உளவு விவகாரம் குறித்து கருத்து தெரிவித்த அமெரிக்கா, இப்படி தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சிவில் சமூகத்தை உளவுபார்ப்பது எப்போதும் கவலை அளிக்கிறது என தெரிவித்தது.

இந்தியாவில் இஸ்ரேல் நாட்டின் 'பெகாசஸ்' உளவு மென்பொருளைப் பயன்படுத்தி காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, திரிணாமுல் காங்கிரஸ் கட்சி மூத்த தலைவர் அபிஷேக் பானர்ஜி உள்ளிட்ட எதிர்க்கட்சி தலைவர்கள், பிரபல தேர்தல் யுக்தி நிபுணர் பிரசாந்த் கிஷோர், மத்திய மந்திரிகள், ஒரு நீதிபதி உள்ளிட்ட 300 பேரின் தொலைபேசிகள் உளவு பார்க்க இலக்கு வைக்கப்பட்டுள்ளன என சர்வதேச ஊடக கூட்டமைப்பு வெளியிட்ட தகவல் நாடு முழுவதும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது.

வாஷிங்டனில் நேற்றுமுன்தினம் பேட்டி அளித்த தெற்காசியா, மத்திய ஆசியா விவகாரங்களுக்கான துணை அமைச்சர் டீன் தாம்சனிடம் இந்திய நிருபர்கள் இதுதொடர்பாக கேள்விகளை தொடுத்தனர். அவற்றுக்கு அவர் பதில் அளித்து கூறியதாவது:-

"சிவில் சமூகம், ஆட்சி மீதான விமர்சகர்கள், பத்திரிகையாளர்கள் அல்லது எவருக்கும் எதிராக இதுபோன்ற உளவு தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது எப்போதும் கவலை அளிக்கக்கூடியதாகும். அதே நேரத்தில் இந்திய விவகாரத்தைப் பொறுத்தமட்டில், என்னிடம் குறிப்பிட்ட எந்த சிறப்பு உள்பார்வைகளும் இல்லை. இது ஒரு பரந்த பிரச்சினை ஆகும். ஆனால், நிறுவனங்களின் உளவு தொழில்நுட்பம் இந்த வகை வழிகளில் பயன்படுத்தப்படாது என்பதை உறுதி செய்ய நாங்கள் குரல் கொடுத்துள்ளோம். இதில் தொடர்ந்து நாங்கள் அழுத்தம் தருவோம்" என அவர் கூறினார்.



## பூமியை நெருங்கி வரும் சிறுகோள் விஞ்ஞானிகள் தொடர் கண்காணிப்பு

வாஷிங்டன், ஜூலை 26

4 கால்பந்து மைதானங்கள் அளவுக்கு சிறுகோள் ஒன்று, பூமி அருகே கடந்து செல்ல உள்ளதாக விஞ்ஞானிகள் கணித்துள்ளனர். இன்று இந்தக் கோள் கடந்து செல்லும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விண்வெளியில் லட்சக் கணக்கான விண்கற்கள் சுற்றி வருகின்றன. இதுவரை 11 லட்சம் விண்கற்கள் சுற்றி வருவதை கண்டுபிடித்துள்ளனர். இந்த கற்கள் பெரிய பாறாங்கல் அளவில் இருந்து சிறிய மலை குன்று அளவு வரை இருக்கின்றன. இந்த கற்கள் அடிக்கடி பூமி அருகே கடந்து செல்வது வழக்கம்.

அவற்றில் சில கற்கள் பூமி மீதும் விழுந்துள்ளன. ஆனால் பெரும்பாலான கற்கள் வளிமண்டலத்தில் வெடித்து பூமிக்கு வரும் போது காற்று உராய்வு ஏற்பட்டு தீ பிடித்து விடும். எனவே பூமிக்குள் வருவதற்குள் அது எரிந்து சாம்பலாகி விடுவது உண்டு. அதையும் மீறி முழுமையாக எரியாமல் பூமியில் விழும் கற்களும் உண்டு.

இதே சிறுகோள், 1935ஆம் ஆண்டு 19 லட்சம் கிலோமீட்டர் தொலைவிலும், 1977ஆம் ஆண்டு 29 லட்சம் கிலோமீட்டர் தொலைவிலும் கடந்து சென்றதாக வானியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.



# முதலாவது உலக சாதனையை நிலைநாட்டிய அவுஸ்திரேலியா

ரோக்கியோ ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் மகளிருக்கான நீச்சல் போட்டியில் அவுஸ்திரேலிய அணி உலக சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளது. முந்தைய சாதனையும் அவுஸ்திரேலியர்களிடமே இருந்தமையும் குறப்பிடத்தக்கது.

அதன்படி ரோக்கியோ ஒலிம்பிக்கின் முதலாவது உலக சாதனை இதுவென்பதும் விசேட அம்சமாகும்.

மகளிருக்கான 4 ஒ 100 மீற்றர் பிரீஸ்டைல் அஞ்சல் நீச்சல் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 3:29.69 நிமிடங்களில் பந்தயத் தூரத்தை நீந்தி, முந்தைய சாதனையிலிருந்து 0,36 செக்கன்களை மீதமாக்கி உலக சாதனை படைத்துள்ளது. அத்தோடு தங்கப்பதக்கத்தை வென்றெடுத்தது.

இந்தப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தை 3:32.78 செக்கன்களில் நீந்திய கனடா அணி வென்றது. அமெரிக்க அணி 3:32.81 செக்கன்களில் பந்தயத் தூரத்தை அடைந்து வெண்கலப்பதக்கத்தை சொந்தமாக்கிக் கொண்டது.

# தொடரை கைப்பற்றியது தென்னாபிரிக்க அணி!



அயர்லாந்து அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 தொடரை 3-0 என்ற அடிப் படையில் தென்னாபிரிக்கா அணி கைப்பற்றியுள்ளது.

பெல்பாஸ்டில் இடம்பெற்ற இந்தப் போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதற்கமைய, முதலில் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர் கள் நிறைவில் தென்னாபிரிக்கா அணி, 02 விக்கட்டுக் களை இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதனை அடுத்து 190 என்ற வெற்றி இலக்கை நோக்கி அயர்லாந்து அணி பதிலுக்கு துடுப்பெடுத்தாட கள மிறங்கியது.

இருப்பினும் அயர்லாந்து அணியால் நிர்ணயிக்கப் பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்கள் இழப்பிற்கு 140 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொள்ள முடிந ்தது. இதனால் 49 ஓட்டங்களினால் தென்னாபிரிக்கா அணி வெற்றிபெற்றது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 72 ஓட்டங்களை அடித்த தென்னாபிரிக்கா அணியின் தலைவர் டெம்பா பவுமா தெரிவு செய்யப்பட்ட அதேவேளை தொடரின் நாயகனாக டேவிட் மில்லர் தெரிவு செய்யப்பட்டார்.

# ஒலிம்பிக் பதக்க நிகழ்வுகளில் முகக் கவசம் அகற்றும் வீரர்கள்



ரோக்கியோ ஒலிம்பிக் பதக்கம் அணியும் நிகழ்வு களின் போது, முகக் கவசம் அணிவது கட்டாயம் என்று சர்வதேச ஒலிம்பிக் குழு நேற்று ஞாயிற்றுக்கிழமை வலியுறுத்தியுள்ளது.

நீச்சல் வீரர்கள் பதக்க மேடையில் முகக் கவசங்களை அகற்றி, ஏனைய வீரர்களை அரவணைத்துக் கொள்ளும் செயற்பாடுகள் வெளியான நிலையிலேயே இந்த அறிவித்தல் மீண்டும் வழங்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸை எதிர்த்துப் போராடுவதற் கான விளையாட்டு அமைப்பாளர்களின் கடுமையான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, அனைத்து விளை யாட்டு வீரர்கள், ஊழியர்கள் மற்றும் ஊடகவியலா ளர்களும் அரங்கத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அனைத்து ஒலிம்பிக் இடங்களிலும் முகக் கவசம் அணிவது கட்டாயமாகும்.

கிர்கிஸ்தான் மற்றும் தஜிகிஸ்தானின் ஒலிம்பிக் அணி யினர் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்க விழாவில் தேசிய அரங்கம் வழியாக பெரும்பாலும் முகக் கவசம் இல்லாமல் அணிவகுத்து வந்தனர்.

இது கொவிட் -19 நெறிமுறைகளுக்கு ஏற்ப முகக் கவசம் அணிந்த பிற தேசிய அணிகளுடன் ஒப்பிடும் போது ஒரு மோசமான வேறுபாடான செயற்பாடு ஆகும்.

விளையாட்டு தொடர்பான நபர்களின் மேலும் 10 கொவிட்-19 தொற்றுக்கு சாதகமாக சோதனை செய்த தாக அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜூலை 1 முதல் ரோக்கியோ விளையாட்டுகளுடன் தொடர்புடைய 130 க்கும் மேற்பட்டவர்கள் கோவிட்-19 தொற்றுக்கு சாதகமாக சோதனை செய்துள் ளமை குறிப்பிடத்தக்கது.



# ஆஷ்லே பார்ட்டி முதல் சுற்றில் தோல்வி

உலகின் முதல்நிலை வீராங்கனையான ஆஷ்லே பார்ட்டி டோக்கியோ ஒலிம்பிக்கின் முதல் சுற்றில் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறியுள்ளார்.

ஸ்பானிஷ் டென்னிஸ் வீராங்கனையான சாரா சோரிப்ஸ் டார்மோவுடன் பலப்பரிட்சை நடத்திய அவர் 6-4, 6-3 என்ற செற் கணக்கில் தோல்வியடைந் தார்.

சாரா சோரிப்ஸ் டார்மோ பிரான்சின் பியோனா ஃ பெரோ அல்லது லாட்வியாவின் அனஸ்தாசிஜா செவாஸ் டோவாவை அடுத்த சுற்றில் எதிர்கொள்ளவுள்ளார்.

# மனிகா பத்ரா இரண்டவாது சுற்றில் அசத்தலான வெற்றி



டோக்கியோ, ஜூலை 26

டேபிள் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவில் மனிகா பத்ரா இரண்டவாது சுற்றில் அசத்தலான வெற்றியை தன்வசமாக்கினார்.

இந்திய பேட்மிண்டன் நட்சத்திரம் மற்றும் ரியோ ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்ற வீராங்கனை பி.வி. சிந்து, ஒற்றையர் குரூப் சுற்றில் இஸ்ரேலின் க்செனியா பொலிகார்போவாவை 21-7, 21-10 என்ற கணக்கில் வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

ஒலிம்பிக் டேபிள் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவில் மனிகா பத்ரா வெற்றி பெற்றுள்ளார்.உக்ரைன் வீராங்கனை மார்கரைட்டாவை 4-3 என்ற புள்ளி கணக் கில் வீழ்த்தி, மனிகா பத்ரா வெற்றியடைந்துள்ளார்.

டென்னிஸ் முதல் சுற்று மகளிர் இரட்டையர் ஆட்டத் தில் சானியா மிர்ஸாவும், அங்கிதா ரெய்னாவும் யுக்ரேனின் கிச்நொக் இரட்டையர்களிடம் தோல்வி அடைந்தனர்.

# ஆப்கான் - பாகிஸ்தான் தொடர் இலங்கையில்!

ஆப்கானிஸ்தானுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடர் ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து இலங்கைக்கு மாற்றப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் 1 முதல் அம்பாந்தோட்டையில் உள்ள மஹிந்த ராஜபக்ஷ மைதானத்தில் இதன் முதலாவது போட்டி நடைபெறும் என ஆப்கானிஸ் தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இந்தத் தொடர் ஆரம்பத்தில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடத்த திட்டமிடப்பட்டபோதும் ஒரு சில காரணங்களினால் அங்கு நடத்த முடியா மல் போனதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஐ.பி.எல். 2021 இன் எஞ்சிய போட்டிகள் செப்ரெம்பர் மாதம் நடை பெறும் அதேவேளை அங்கும் ஓமானிலும் உலகக் கிண்ண ரி-20 போட்டி இடம்பெறவுள்ளது.



# கம்பனிகளுக்கு எதிராக மஸ்கெலியாவில் போராட்டம்

மஸ்கெலியா, ஜூலை 26

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் தொழில் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும், பெருந்தோட்டக் கம்பனிகளின் நடவடிக்கைக்கு எதிராகவும் மஸ்கெலியாவில் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் ஏற்பாட்டில் மஸ்கெலியா எரிபொருள் நிலையத்துக்கு முன்பாக நடைபெற்ற இந்தப் போராட்டத்துக்கு தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம் தலைமை தாங்கினார்.

“ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு இடம்பெற்றுள்ளது எனக்கூறப்பட்டாலும் தொழிலாளர்களின் தொழில் சுமை அதிகரிக்கப்பட்டுள்ளது. நாளொன்றுக்கான பெயருக்கு 20 கிலோ கொழுந்து பறிக்க வேண்டியுள்ளது. அதேபோல் பல தோட்டங்களில் வேலை நாட்கள் குறைக்கப்பட்டுள்ளன. நலன்புரிச் சலுகைகள் நிறுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான அடக்குமுறைச் செயற்பாடுக ளைக் கம்பனிகள் கைவிட வேண்டும்” என்று போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர். (இ)



# சிறார், பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்போம்!

## கொட்டகலையில் நேற்றுப் போராட்டம்

கொட்டகலை, ஜூலை 26

சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் வன்முறைகளைக் கண்டித்து கொட்டகலை பிரதேச சபைக்கு முன்பாக நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மலையகப் பெண்கள் குழுக்களின் ஒன்றிணைவுடன் ப்ரொடெக்ட் சங்கம் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பதாதைகளை ஏந்திய வண்ணம் கோஷங்களை எழுப்பிவாறு குறித்த போராட்டத்தை நடத்தினர்.

அத்தோடு, முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்து தீக்காயங்களுடன் மரணமடைந்த சிறுமி ஹிஷாலினியின் மரணத்துக்கு நீதி வேண்டும் எனவும் போராட்டக்காரர்களால் வலியுறுத்தப்பட்டது.

“நாடு முழுவதும் உள்ள சிறுவர் மற்றும் சிறுமிகள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். அவர்கள் பணி செய்யும் பகுதிகளில பல்வேறு துஷ்பிரயோகங்களிற்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். எனவே, இதற்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். குறிப்பாக ஹிஷாலினியின் மரணத்துக்குகே காரணமானவர்கள் தண்டிக்கப்பட்டு, நீதி நிலைநாட்டப்பட்ட வேண்டும். சிறுவர்களை வேலைக்கு அமர்த்துகின்ற தரகர்களுக்கும் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும்” எனவும் போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர். (இ)

# தொழிலாளர்களுக்கு அநீதி தொடர்ந்தால் தொழிற்சங்கப் போராட்டங்கள் வெடிக்கும்!

## தோட்டக் கம்பனிகளுக்கு திகாம்பரம் எம்.பி. எச்சரிக்கை

**மஸ்கெலியா, ஜூலை 26**

**“மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு யாரும் இல்லை என நினைக்க வேண்டாம். நாங்கள் இருக்கின்றோம். தொழிலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களுக்கான ஊதியம் உரிய வகையில் வழங்கப்பட வேண்டும். இல்லையேல் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்குவோம்.”**



- இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

மஸ்கெலியாவில் நேற்று நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் சம்பள நிர்ணய சபையில் எடுக்கப்பட்டது. இதற்கமைய தோட்ட நிர்வாகங்கள் சம்பளம் வழங்க வேண்டும். ஆனால், ஒரு சில தோட்டங்களில் 20 கிலோ கொழுந்து பறித்தால்தான் ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனக் கூறப்படுகின்றது. குறிப்பாக மஸ்கெலியா பிளான்டேசன் இந்த விடயத்தில் உறுதியாக உள்ளது.

தோட்டக் கம்பனியின் இந்தப் போக்கை அனுமதிக்க முடியாது. கொழுந்து உள்ள காலத்தில் 20 கிலோ எடுக்கலாம். இல்லாத காலத்தில் என்ன செய்வது?

ஆயிரம் ரூபாவை வழங்க முடியாவிட்டால் தோட்டத்தை அரசிடம் ஒப்படைக்க வும். நாங்கள் அரசுடன் பேசி பிரச்னைகளைத் தீர்க்கின் றோம்.

இரசாயன உரப் பயன்பாட்டுக்குத் திடீரென விதிக்கப்பட்ட தடையால் பெருந்தோட்டத்துறையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் எதிர்காலத்தில் 15 கிலோ பறிக்க முடியுமா என்று கூட தெரியவில்லை. எனவே, உரத்தை இறக்குமதி செய்வ தற்காவது அரசு அனு மதி வழங்க வேண்டும்” - என்றார். (இ)

# மரண அறிவித்தல்

மலர்வு 17 - 05 - 1991



உதிர்வு 22 - 07 - 2021

## திருமதி சர்மிளா பிரதாப் (ஆஷா)

கொழும்பைப் பிறப்பிடமாகவும், வவுனியா இறம்பைக் குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சர்மிளா பிரதாப் அவர்கள் 22.07.2021 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார் .

அன்னார் விஜயகுமார் நாகம்மா – தம்பதியரின் பாசமிகு இளைய மகளும், காலஞ்சென்ற துரைராஜா – சுகந்தி தம்பதியரின் பாசமிகு மருமகளும், பிரதாப் அவர்களின் அன்பு மனைவியும், லவின் அவர்களின் பாசமிகுதாயாரும், மகேஸ்குமார்( கனடா), உஷாமகேஷ் (லண்டன்), மகேஷ்கண்ணா (அவுஸ்திரேலியா), சிவராஜினி (வவுனியா), ரமணன் (RDB Bank,வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், வதனா (கனடா), உதயகுமார் (லண்டன்), தாட்சாயினி (அவுஸ்திரேலியா), லோகேஸ்வரன் (G.u;.A De Silva & Co), சுகந்தராஜா, வக்ஷலன் (வவுனியா) ஆகியோரின் பாசமிகுமைத்துனியும், வர்ஷா, கஸ்துதி, விஹாஸ், கிரிஸ்வின் ஆகியோரின் சிறியதாயாரும், திலக்ஷன், நிலக்ஷன், நேரு,கவின் ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு :**
**பிரதாப் (கணவர்) - 0770741844**
**மகேஷ் கண்ணா(சகோதரன்) - 0061469064090**
**ரமணன் (சகோதரன்) - 0776669000**
**லோகேஸ்வரன் (மைத்துனர்) - 0776945067**
**உதயகுமார் (மைத்துனர்) - 00447305972947**

தகவல்
**குடும்பத்தினர்.**

# மலையக சிறார்களைப் பாதுகாக்க இ.தொ.கா. விசேட வேலைத்திட்டம்

ஹட்டன், ஜூலை 26

“மலையகத்தைச் சேர்ந்த வீட்டுப் பணியாளர்கள் மற்றும் சிறுவர் தொழிலாளர்கள் குறித்து ஆராய இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.”

- இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளரும் பிரஜா சக்தி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் பணிப்பாளருமான பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

ஹட்டனில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் பணிப்புரைக்கமைய இந்த நடவடிக்கை பிரஜா சக்தி அமைப்பின் ஊடாக சிறுவர் பாதுகாப்பு மற்றும் வலுவூட்டல் பிரிவு அறிமுகப்படுத்தப்பட்டு முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக வீட்டுப் பணியாளர்கள் மற்றும் சிறுவர் தொழிலாளர்கள் குறித்த முறைப்பாடுகளை அறிவிக்கவோ, சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கவோ, பாதுகாப்புக்காகவோ விசேட தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல் தங்களின் ஆலோசனைகளையும் முன்வைக்கலாம்.

0715550666, 0512222422 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்புகொண்டு தங்களின் கருத்துக்களைத் தெரிவிக்கலாம்.

இதனூடாக 18 வயதுக்குக் குறைவான சிறுவர்களை வேலைக்கு அமர்த்தவர்களுக்கு எதிராகவும், அச்சுறுத்தலுக்குள்ளான தொழில்களுக்கு அமர்த்தவதற்கும் அதற்குச் சம்பந்தப்பட்ட தரகர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அரச உயர் சபைகளோடு இந்த நடவடிக்கைகள் அனைத்தும் முன்னெடுக்கப்படும்.

அதுமட்டுமல்லாமல் தோட்ட முகாமைத்துவம் மற்றும் கிராம சேவகரின் ஊடாக அந்தந்த இடங்களில் இருந்து 18 வயதுக்குக் குறைந்த சிறுவர்கள் எங்கு வேலைகளுக்குச் சென்றுள்ளார்கள் எனத் தகவல்கள் திரட்டப்பட்டு அது குறித்து ஆராயப்படும்.

மேலும், பாடசாலைகளை விட்டு இடை விலகும் மாணவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கி மீள் கற்கை ஆரம்பித்தல், அவர்களுக்குத் தேவையான பொருளாதார உதவிகள் வழங்கல், தொண்டமான் தொழில்நுட்பக் கல்லூரி ஊடாக இலவச கல்வி வழங்குதல், கண்டி மற்றும் பதுளை ஆகிய பகுதிகளில் இந்தக் கல்லூரியின் கிளைக் காரியாலங்களை இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நிறுவுவதல் ஆகியவற்றுக்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

வயது குறைந்த சிறுவர்களைப் பணிக்கு அமர்த்துவது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் பாராளுமன்றத்தில் யோசனை முன்வைக்கவுள்ளார். தொழில் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்காக இந்த யோசனையை முன்வைக்கவுள்ளார். இது தொடர்பில் புத்திஜீவிகள் ஆலோசனைகள் வழங்கலாம்” - என்றார். (இ)

## ஆபத்தான திசை...

இந்த நிலையில் இருந்து நாட்டை மீட்க இன, மத, மொழி, சாதி வேறுபாடு இன்றி இலங்கையர் என்ற அடையாளத்துடன் அனைவரும் அணிதிரள வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

கறுப்பு ஜூலை என்ற கரும்புள்ளி ஏற்பட்டு 38 வருடங்கள் நிறைவுறும் நிலையில், இதனை நினைவுபடுத்தி மங்கள சமரவீர தனது அரசியல் நகர்வை ஆரம்பித்துள்ளார்.

கறுப்பு ஜூலை என்ற இனக் கலவரம், போலி தேசப்பற்றாளர்களினால் நாட்டை பின்நோக்கி நகர்த்துவதற்கான பாடுபாதக செயல் என்றும் மங்கள சமரவீர கண்டித்தார்.

அத்துடன், இந்த கறுப்பு ஜூலை நடந்து 38 வருடங்கள் நினைவுறுவதை நினைவுபடுத்தி தனது புதிய அரசியல் நகர்வை மங்கள சமரவீர ஆரம்பித்துள்ளார். இன,மத, மொழி வேறுபாடு இன்றி இளைஞர்களை அணி திரட்டியே இந்த மாற்றத்தை ஏற்படுத்த விரும்புவதாக அவர் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை தற்போதைய அரசாங்கத்துக்கு ஒப்படைத்த போது தாம் நிதி அமைச்சராக பதவி வகித்ததாகவும் அப்போது அந்நிய செலாவணி கையிருப்பு 7.6 பில்லியன் டொலர்கள் காணப்பட்டதாகவும் அந்த தொகை எதிர்வரும் நாள்களில் 2.6 பில்லியன் டொலர்களாக வீழ்ச்சியடையும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரத்தின் பின்னர் இலங்கை வரலாற்றில் அந்நிய செலாவணி கையிருப்பு மிகவும் வீழ்ச்சியடையும் சந்தர்ப்பமாக இதனை கருதப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2020ஆம் ஆண்டில் அரச வருமானங்கள் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் வரவு செலவுத் திட்ட இடைவெளியும் பாரியளவில் அதிகரித்துள்ளது என தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கம் நினைத்துப் பார்க்க முடியாத அளவு பணத்தை அச்சிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் நாட்டில் காணப்பட்ட பொருட்களுக்கு வரிசையில் நிற்கும் காலத்தை விடவும் மோசமான சிம்பாப்வே மற்றும் வெனிசுவேலா போன்ற நாடுகளின் பொருளாதார நிலைமைக்கு இலங்கை செல்லக்கூடிய ஆபத்து காணப்படுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நாட்டின் உரத்துக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அமெரிக்க டொலர் பற்றாக்குறையினால் வெளிநாடுகளிலிருந்து மருந்துப் பொருள்களை தருவிக்க முடியவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம் எனவும் அவ்வாறு ஏற்பட்டால் அதனை அரசாங்கம் மூடி மறைத்துவிட்டு உடல் நலத்திற்கு நன்மை ஏற்படும் அதனால் சைக்கிளில் பயணிக்குமாறு கோரப்படக் கூடும் என அவர் தெரிவித்துள்ளார்.

தேசப்பற்று என்ற போலி கொள்கைகளின் காரணமாக இந்த நாடு பல தசாப்தங்களாக பின்நோக்கி நகர்ந்து சென்றுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தேசப்பற்று என்ற மக்களை ஏமாற்றிய அரசாங்கத்தை மட்டுமன்றி அதற்கு ஏமாற்றமடைந்த மக்களும் இந்த அழிவிற்கு பொறுப்பாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

கோட்டாபய தோல்வியடைந்தார் என்பதனை விடவும் அவர் பிரதிநிதித்துவம் செய்த கொள்கைகளே நேற்று தோல்வியடைந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இனவாத, மதவாத காலம் கடந்த பழைய கொள்கைகள் கோட்பாடுகளே தோல்வியடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

உண்மையிலேயே நாட்டு பற்று என்ன என்பதனை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

சிங்கள பௌத்த பெயரில் தமிழரை கொல்வது தேசப்பற்றாகாது என அவர் சுட்டிக்காட்டினார்.

சிங்களம் என்று சொல்லி கடைகளை எரிப்பதனாலும், வீடுகளை உடைப்பதனாலும் அதிகளவில் பாதிக்கப்படுவது இறுதியில் சிங்களவர்களே என அவர் குறிப்பிட்டார்.

ராஜபக்ஷ விரோத கூட்டணிகளை அமைப்பதில் மட்டும் வெற்றி கிடைக்காது கொள்கை ரீதியான இணக்கப்பாட்டுடன் தேசிய கொள்கைகள் உருவாக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டார்.

நடுநிலையான கொள்கைகள் பின்பற்றப்பட்டு மெய்யான தேசப்பற்றை உருவாக்குவதற்கு நாட்டின் அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படுவோம் என அவர் தெரிவித்துள்ளார்.

## உள்ளூராட்சி...

பெப்ரவரி மாதம் 10ஆம் திகதிவரை அதனைப் பிற்போடுவதற்கு வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் மாகாண சபைத் தேர்தல் பல ஆண்டுகளாக ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதிலும் தற்போது சிக்கல் எழுந்துள்ளது.

கடைசியாக உள்ளூராட்சி சபைத் தேர்தல் 2018ஆம் ஆண்டில் நடைபெற்றது. அதன்படி உள்ளூராட்சி சபைத் தேர்தல் அடுத்த ஆண்டு பெப்ரவரி 10ஆம் திகதிக்கு முன்பு நடத்தப்பட வேண்டும்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் சட்டத்தின் விதிகளின்படி, உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டிய திகதியிலிருந்து சுமார் ஆறு மாதங்களுக்குள் தேர்தலை நடத்துவதற்கு அதிகாரம் உள்ளது.

அதன்படி, குறித்த திகதியிலிருந்து தேவைப்பட்டால் மேலும் 16 நாள்களில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த வாய்ப்பு உள்ளது எனத் தேர்தல் ஆணைக்குழு கூறியுள்ளது.

எனினும், கொரோனா வைரஸ் தொற்று நிலைமை காரணமாக மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், ஒரு வருடத்துக்கும் மேலாக மட்டுமே உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்க, விடயத்துடன் தொடர்புடைய அமைச்சருக்கு அதிகாரம் இருக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொரோனா தடுப்பூசி...

பிட்டுள்ளனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நீண்ட காலமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளில் 46 பேர் தற்போது கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் உள்ள நிலையில், அவர்களில் சிலர் 60 வயதைக் கடந்தும், சுகயீன முற்றும் உள்ளனர் எனத் தெரியவருகின்றது.

தாம் தடுப்பூசியைப் பெற்றுக்கொடுக்குமாறு பல தடவைகள் வலியுறுத்திய போதும், அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

சிறைச்சாலைக்குள் சுகாதார வசதிகள் குறைவாக உள்ளன எனவும், கைதிகள் சிலருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னரும், அவர்களை முறையாக பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் தமிழ் அரசியல் கைதிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

பொதுமன்னிப்பின் கீழ் 16 தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டமைக்காக ஜனாதிபதிக்கு நன்றியைத் தெரிவித்துள்ள அவர்கள், அதே கரிசனையை தம் மீதும் காட்டுமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ)

## நேற்று 1, 656...

கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 96 ஆயிரத்து 506 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நேற்று 937 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்து சிகிச்சை நிலையங்களிலிருந்து வெளியேறினர்.

அதற்கமைய, நாட்டில் இதுவரை தொற்றிலிருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 67 ஆயிரத்து 602 ஆக அதிகரித்துள்ளது. (இ)

# “மிகவும் அதிர்ச்சியளிக்கிறது”

கொழும்பு, ஜூலை 26

கப்பிடல் மகாராஜா குழுமத்தின் தலைவர் ஆர்.இராஜமகேந்திரனின் இழப்பு மிகவும் அதிர்ச்சியையும் வருத்தத்தையும் அளிக்கின்றது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில்,

“ஆர்.இராஜமகேந்திரன் இலங்கையின் இலத்திரனியல் ஊடகத்துறையில் முன்னணி வகித்ததோடு, பல்வேறு துறைகளில் தடம் பதித்து பல சாதனைகளை மட்டுமல்லாது மக்களுக்கும் பாரிய சேவையையும் புரிந்துள்ளார்” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## சிறுவர் மீதான...

கமைக்கப்பட்ட திட்டமொன்று அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்டவர்கள் சிறுவர்கள் என்பதால் குற்றமிழைத்தவர்களின் அந்தஸ்த்து பதவிகளை பாராமல் சட்டத்தினை பொறுப்புணர்வுடனும் துரிதமாகவும் நடைமுறைப்படுத்தவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறுவர் துஸ்பிரயோகம் குறித்த செய்திகளை அடிக்கடி கடந்தகாலங்களில் வாசித்திருக்கின்றோம் செவிமடுத்திருக்கின்றோம்,ஆனால் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதை தவிர சிறுவர்கள் மீண்டும் அந்த துயரத்திற்குள் சிக்குவததை தடுப்பதற்கான சூழலை உருவாக்குவதற்கான திட்டமிட்ட கலந்துரையாடல்கள் எவையும் இடம்பெறவில்லை எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சிறுவர் துஸ்பிரயோகம் சிறுவர் அடிமைத்தனம் போன்றவை சிறுவர்கள் நீண்டகால உளவியல் பாதிப்பு மற்றும் உடல்ரீதியான பாதிப்புகளை எதிர்கொள்ளும் நிலையை உருவாக்குகின்றன என அமைச்சர் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக சமூகம் செயல்இழக்கும் நிலை உருவாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அரிசி, தேங்காய்...

குறைப்பது போல எரிபொருள்களின் விலைகளை உள்நாட்டு நடவடிக்கைகள் மூலம் குறைக்க முடியாது எனஅவர் சுட்டிக்காட்டினார்.

“எனக்கு எரிபொருள் விலைகளை குறைக்க விருப்பம் ஆனால் இது வெளநாடுகளுடன் தொடர்புபட்ட விடயம். இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனத்தில் 6000 பேர் பணியாற்றுகின்றனர். ஆனால் ஒபேக்கில் 300 பேரே பணியாற்றுகின்றனர்” எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## கடும் காற்றுடன்...

கடும் காற்றும் மற்றும் கடற்கொந்தளிப்பு இன்று பிற்பகல் 2.30 மணி வரை நீடிக்கும் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. அதற்கிணங்க, காலியில் இருந்து ஹம்பாந்தோட்டையினூடாக பொத்துவில் வரை மற்றும் புத்தளத்தில் இருந்து மன்னாரினூடாக காங்கேசன் துறை வரையிலான கடற்பிராந்தியங்கள் இடைக்கிடையே கொந்தளிப்பாக காணப்படும் என கூறப்பட்டுள்ளது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பிராந்தியங்கள் கொந்தளிப்பாக காணப்படும் என்பதால் கடற்றொழிலாளர்களை மிக அவதானத்துடன் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

## தகவல் அறியும்...

யாக திகழ்ந்தார்” என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார். அவர் தனது செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

கெப்பிடல் மஹாராஜா குழுமத்தின் தலைவர் ஆர்.ராஜமகேந்திரனின் மறைவு செய்தி அறிந்து நான் மிகவும் மனவருத்தமடைந்தேன்.

திறமையான தொழிலதிபராக இந்நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வணிக வலையமைப்பை பராமரித்து வந்த ஆர்.ராஜமகேந்திரன் அவர்கள் அதனூடாக இலட்சக்கணக்கான மக்களுக்கு உறுதுணையாக விளங்கினார்.

சிரச, சக்தி, எம்.ரி.வி. ஆகிய ஊடக வலையமைப்பின் உரிமையாளராக மக்களின் தகவல் அறியும் உரிமைக்காக தொடர்ந்தும் முன்நின்ற ஆர்.ராஜமகேந்திரன் நமது நாட்டின் தொலைக்காட்சி மற்றும் வானொலி துறையை நவீனமயப்படுத்துவதில் முன்னோடியாக திகழ்ந்தார்.

மக்களுக்கு உண்மை செய்தியை வழங்குவதற்கும் மேலாக ‘கம்மெத்த’ போன்ற நிகழ்ச்சிகளின் ஊடாக கிராம மக்களின் வளர்ச்சிக்கு வழிவகுத்த ஆர். ராஜமகேந்திரன், ஒரு திறமையான தொழிலதிபராகவும் சமூக சேவையாளராகவும் இந்நாட்டிற்காக தனது கடமையை நிறைவேற்றியுள்ளார்.

## ஆசிரியர் சம்பள...

கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர் சம்பளப் பிரச்னை உட்பட பல்வேறு கோரிக்கைகளையும் முன்வைத்து, இணையவழி கற்பித்தலில் இருந்து ஒதுங்கிக்கொண்டுள்ளனர்.

கல்வி அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் பல்வேறு பேச்சுகள் நடத்தியும் தீர்வு கிடைக்காததால், பணிப்பகிஷ்கரிப்பு தொடர்கின்றது.

இந்நிலையில், எதிர்வரும் நாட்களில் தீர்வு கிடைக்கும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மேலும், ஆசிரியர்கள் பணிப்பகிஷ்கரிப்பை முடித்துக்கொண்டு, கற்பித்தல் நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ)

## கொரோனா தொற்...

யில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

23 ஆண்களினதும், 22 பெண்களினதும் மரணங்கள் நேற்றுமுன்தினம் இவ்வாறு பதிவாகியுள்ளன.

30 வயதுக்குட்பட்ட ஆண் ஒருவரும், 30 முதல் 59 வயதுக்கு இடைப்பட்ட 3 ஆண்களும், 4 பெண்களும் கொரோனா நோயால் மரணித்துள்ளனர்.

அத்துடன், 60 வயதுக்கு மேற்பட்ட 19 ஆண்களினதும், 18 பெண்களினதும் மரணங்கள் பதிவாகியுள்ளன எனவும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, நாட்டில் இதுவரையில் பதிவாகியுள்ள கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 99 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## இராஜமகேந்திரன்...

ரகம் அனுதாபம் தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த இராஜமகேந்திரன் நேற்று காலமானார்.

அவரது மறைவு தொடர்பாக இந்தியத் தூதரகம் ருவிட்டர் செய்தியொன்றை வெளியிட்டுள்ளது.

“கபிட்டல் மகாராஜா குழுமத்தின் தலைவர் இராஜேந்திரன் இராஜமகேந்திரனின் மறைவுக்கு உயர்ஸ்தானிகராலயம் தனது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றது. அவரது ஆன்மாவுக்கு எமது மரியாதைகளைக் காணிக்கையாக்கும் அதேவேளை, அவருக்கும் எமக்கும் இடையிலான நீண்ட பிணைப்பினையும் அன்புடன் நினைவுகூர்கின்றோம்” என்று இந்தியத் தூதரகம் ருவிட்டரில் தெரிவித்துள்ளது. (இ)

ஈழநாடு
Eelanadu

# 3ஆம் அலையில் மரணம் உச்சம்!

## தடுப்பூசி பெறாதவர்களே அதிகம் உயிரிழப்பு; சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு



**கொழும்பு, ஜூலை 26**

**“இலங்கையில் கொரோனாவின் மூன்றாம் அலையில் மரண வீதம் உச்சமடைந்துள்ளது. கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாதவர்களே அதிகம் உயிரிழக்கின்றனர்.”**

**- இவ்வாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.**

*அவர் மேலும் தெரிவித்ததாவது: “முதலாவது கொரோனா அலையால் நாட்டில் 13 உயிரிழப்புகளே பதிவாகியிருந்தன.*

*அதேபோல் இரண்டாவது அலையில் 591 உயிரிழப்புகள் பதிவாகியிருந்தன.*

*எனினும், கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் ஆரம்பான கொரோனாவின் மூன்றாவது அலையில் 3 ஆயிரத்து 450 பேர் உயிரிழந்துள்ளனர்” - என்றார். (இ)*



# இரசாயன உரத்தைக் கோரி நாவலப்பிட்டியில் போராட்டம்

*நாவலப்பிட்டி, ஜூலை 26*

*இராசாயன உரத்தைப் பெற்றுத் தருமாறு கோரி நாவலப்பிட்டி பலாந்தோட்டப் பகுதியில் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.*

*பஸ்பாகே கோரளை பிரதேச சபையின் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் திலகசிறி சிறிசேன தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.*

*அரசின் தவறான தீர்மானத்தால், விவசாயிகளும் சிறுதோட்டத் தேயிலை உரிமையாளர்களும் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். இரசாயன உரத்தை நிறுத்திய அரசு, சேதன பசளை வழங்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இதன்போது போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.*

*சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (இ)*

# போதைப்பொருட்களுடன் 8 பேர் வெவ்வேறு இடங்களில் சிக்கினர்

*கொழும்பு, ஜூலை 26*

*நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் சுற்றிவளைப்புகளில் ஐஸ் மற்றும் ஹெரோய்ன் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.*

*25 இலட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருட்களே இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.*

*இதன்போது 8 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.*

*அவர் மேலும் தெரிவித்ததாவது:-*

*“கல்கிசை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அத்திட்டிய பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 210 கிராம் ஹெரோய்னுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பிட்டிகல, கல்கிசை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 41, 54 வயதுடைய இருவரே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.*

*கொஹூவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போதியாவத்த பிரதேசத்தில் 15 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். போதியாவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.*

*கிராண்ட்பாஸ், ஸ்டேஸ்புர பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் 5 கிராம் 320 மில்லிகிராம் ஹெரோய்னுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஒருகொடவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.*

*கிராண்ட்பாஸ் 75ஆம் தோட்டம் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் 5 கிராம் 60 மில்லிகிராம் ஹெரோய்னுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளர். கிராண்ட்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.*

*பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காதர்நானா தோட்டத்தில் 4 கிராம் 600 மில்லிகிராம் ஹெரோய்னுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கொலன்னாவை பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.*

*கல்கிசை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெடிகந்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் 4 கிராம் 550 மில்லிகிராம் ஹெரோய்னுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இரத்மலானை பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.*

*கல்கிசை பொலிஸ் பிரிவுக்குட்பட் கல்தெமுல்ல பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 4 கிராம் 280 மில்லிகிராம் ஹெரோய்னுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கல்தெமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்” - என்றார்.*

*போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுபவர்கள் மற்றும் பயன்படுத்துபவர்கள் தொடர்பில் தகவல் தெரிந்தால் 1997 என்ற இலக்கத்துக்கு தொடர்புகொண்டு தகவல் தருமாறும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அறிவுறுத்தினார். (இ)*

# இராஜமகேந்திரனின் உயிரிழப்பு ஊடகத்துறைக்கு மட்டுமன்றி நாட்டின் ஜனநாயகத்துக்கும் பேரிழப்பு!

## இரங்கல் செய்தியில் ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு



*கொழும்பு, ஜூலை 26*

*“சக்தி - சிரச - எம்.ரி.வி. ஊடக குழுமங்களின் உரிமையாளரும் கபிட்டல் மகாராஜா நிறுவனத்தின் கூட்டுப் பணிப்பாளருமான ஆர். இராஜமகேந்திரனின் மரணம் ஊடகத்துறைக்கு மட்டுமன்றி நாட்டின் ஜனநாயகத்துக்கும் பாரிய இழப்பாகும்.”*

*- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.*

*கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித் ததாவது:-*

*“மரணித்த ஆர். இராஜமகேந்திரனுக்கு ஐக்கிய மக்கள் சக்தி சார்பிலும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சார்பிலும் கட்சியின் உறுப்பினர்கள் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.*

*நானும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை அவரது குடும்பத்தினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*நான் அரசியலுக்கு வருவதற்கு முன்பு வங்கி ஊழியரராகக் கடமையாற்றினேன். அவரது அனைத்து கருத்துகளுக்கும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஒத்துப்போக வில்லை. எனினும், நன்கு உரை யாற்றக் கூடிய வாதவிவாதங்களில் ஈடுபடக் கூடிய நபர் என்று கூற வேண்டும்.*

*அவர் ஊடக சுதந்திரத்துக்காகப் போராடினார். ஊடக அடக்குமுறைகளுக்கு எதிராக நின்று குரல் கொடுத்தார்.*

*ஊடக சுதந்திரத்துக்காகப் போராடினார் என்பதன் அர்த்தம் அன்று இருந்த அரசின் கருத்துக்களுக்கு மாறாக வித்தியாசமான கருத்துக்கள் இருப்பின் அந்தக் கருத்துகளைக் கூறுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்பதே ஊடக சுதந்திரமாகும். எமது அரசு இருந்தபோதும் ஊடக சுதந்திரத்துக்காக அவர் போராடினார். அதனை நாம் ஊடக சுதந்திரத்துக்கான போராட்டமாகவே பார்க்க வேண்டியுள்ளது.*

*அவர் எம்மை விட்டுச் சென்றது ஊடகத்துறைக்கு மட்டுமன்றி நாட்டின் ஜனநாயகத்துக்கும் பாரிய இழப்பாகும். அவரது ஆன்மா சாந்தியடைய வேண்டும் என நாம் பிரார்த்தனை செய்து கொள்கின்றோம்” - என்றார். (இ)*

# கொரோனா சிவப்புப் பட்டியலில் இருந்து இலங்கையை நீக்குவதற்கு நடவடிக்கை

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

*கொழும்பு, ஜூலை 26*

*“கொரோனா சம்பந்தமாக இலங்கை சிவப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், இலங்கையை அந்தப் பட்டியலில் இருந்து நீக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.”*

*- இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.*

*அவர் மேலும் தெரிவித் ததாவது:-*

*“குவைத், ஐக்கிய அரபு இராஜ்ஜியம், லாவோஸ், கட்டார், மலேசியா, மியன்மார், சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், இங்கிலாந்து, போத்துக்கல், இத்தாலி, ஜேர்மனி, ஆஸ்திரேலியா, நோர்வே, பஹ்ரேன், நேபாளம், ஜப்பான், வியட்நாம், பிரான்ஸ், நியூசிலாந்து ஆகிய நாடுகள் இலங்கையைச் சிவப்புப் பட்டியலில் சேர்த்துள்ளதுடன் இந்த நாடுகளுக்கு இலங்கையில் இருந்து செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.*

*அந்நாடுகளும் கொரோனா சட்டத்திட்டங்களுக்கு அமைய பல்வேறு பயணக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளன.*

*இந்தப் பயணக் கட்டுப்பாடுகளை நீக்குவது சம்பந்தமாக அந்நாடுகளைச் சேர்ந்த இலங்கைக்கான தூதுவர்களுடன் அரசு பேச்சு நடத்தி வருகின்றது.*

*மத்திய கிழக்கு நாடுகள் உட்பட வெளிநாடுகளுக்குத் தொழில் மற்றும் கல்வி கற்கச் செல்ல எதிர்பார்த்துள்ள இலங்கையைச் சேர்ந்தவர்கள், கொரோனாத் தொற்று நோய் நிலைமையில் வெளிநாடு செல்லக் காணப்படும் தடையை நீக்க சம்பந்தப்பட்ட நாடுகளுடன் தொடர்ந்தும் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.*

*கல்வி கற்க வெளிநாடு செல்லும் மாணவர்கள் இரண்டு தடுப்பூசிகளையும் செலுத்திக்கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளதால், அதற்கமைய செயல்பட்டு, மாணவர்கள் வெளிநாடு செல்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்கவுள்ளோம்” - என்றார். (இ)*






இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.07.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து-
உளவளத்துனையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு



7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்-சிங்கப் பெண்ணே
11.00 மணி : சுப்பர் குறூப்-மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும்
(மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-விவேகம்,
பரத் எனும் நான்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை
மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
06.30 மணி : நலந்தானா-உள நல பொது வைத்திய
நிபுணர் எஸ்.சிவதாஸ்



**இரவு**
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை
மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி
(மறுஒளிபரப்பு)
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு